Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 026 | செவ்வாய்க்கிழமை | மார்கழி 7ஆம் நாள் 22 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## நேற்றும் 364 பேருக்கு தொற்று

கொழும்பு, டிசெ.22

இலங்கையில் நேற்றும் 364 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 33 ஆயிரத்து 954 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 37 ஆயிரத்து 631ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 28 ஆயிரத்து 682 பேர் குணமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 19 ➤

# வார்த்தை ஜாலத்தால் தமிழினத்தை படுகுழியில் தள்ளுகிறார் சுமந்திரன்

## ஐ.நா. விவகாரத்தில் நடந்தவற்றை புட்டு வைக்கின்றார் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், டிசெ.22

சுமந்திரனின் கடிதத்தில் முன்னர் மூன்று முறை காலக்கேடு அளித்தது போன்று மேலும் ஒருமுறை அளிக்க வேண்டும் என்ற அர்த்தமே உள்ளது. சிரியா, மியான்மர் பற்றிக் குறிப்பிடும் அவர் அதைப் போன்ற பொறிமுறைகளை இலங்கை தொடர்பாக இயற்றுமாறு கூறவில்லை. எமது கருத்துக்களை அறிய முன்னரே அந்தக் கடிதம் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று அறிகின்றேன். சுமந்திரன் அளாப்புகின்றார் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன். விரிவு 2ஆம் பக்கம்

## விதிமுறை மீறல்: கடைகளுக்கு 'சீல்'

கொழும்பு, டிசெ.22

சுகாதார நடைமுறைகளையும், தனிமைப்படுத்தல்சட்ட விதிமுறைகளையும் மீறி இயங்கிய இரு வர்த்தக நிலையங்கள் "சீல்" வைத்து மூடப்பட்டுள்ளன என்று பருத்தித்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். 19 ➤

# யாழில் நேற்றும் மூவருக்குத் தொற்று

### மருதனார்மடம் கொத்தணி 93 ஆக உயர்ந்தது

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்ப்பாணத்தில் நேற்று மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். . கோப்பாய், 19 ➤

# அரசின் போக்கு அழுத்தத்தை அதிகரிக்கும்

## சந்திரிகா எச்சரிக்கை

கொழும்பு, டிசெம்பர் 22

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எதிரொலிப்பதற்கு ராஜபக்ச அரசுதான் முழுப் பொறுப்பு. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா அமர்வில் இலங்கை முஸ்லிம் மக்களின் விவகாரமும் அங்கு எதிரொலிக்கும் நிலைமையையும் இப்போது இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. இது இலங்கை மீதான சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை மென்மேலும் அதிகரிக்கச் செய்யும்.


இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார். 19 ➤

## ஆயுதம் மீட்பு

கிளிநொச்சி, டிசெ.22

கிளிநொச்சி, அறிவியல்நகர் காட்டுப்பகுதியில் ரி-56 துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர். இவை பயன்படுத்த முடியாத நிலையில் காணப் 19 ➤

நேற்று வானில் தோன்றிய அரிய காட்சி...



வியாழன் மற்றும் சனி கிரகங்கள் நேற்று ஒரே நேர்கோட்டில் வந்தன. இந்தச் சந்தர்ப்பம் 800 ஆண்டுகளுக்கு ஒருமுறையே நடக்கும் என்று கூறப்படுகின்றது.

## கோத்தா அரசை மறைமுகமாக குத்திக் காட்டிய மைத்திரிபால!



கொழும்பு, டிசெ.22

அரசியல் அதிகாரத்தை அளவுக்கு அதிகமாகத் தக்கவைத்துக்கொள்ள முயற்சிப்பது அறிவீனமாகும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

'ஆசியாவில் எமக்கு ஜனநாயகத்தின் முக்கியத்துவம்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் இணையவழியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜப்பான் வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறித்த மாநாட்டில் கலந்துகொண்டார். அவர் தனது உரையில் மேலும் தெரி 19 ➤

# வீரசேகரவின் கருத்து முட்டாள்தனமானது!

### விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.22

தமிழ் மக்களுக்கு எந்த விதமான அதிகாரப் பகிர்வையும் கொடுத்துவிடக் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே 19 ➤

# தமிழ் மக்களுக்கு என்று தனி அதிகாரம் இல்லை

### வீரசேகர போர்க்கொடி

கொழும்பு, டிசெ.22

அதிகாரங்கள் பொதுவானவை. அவை அனைத்தும் மத்திய அரசின் கீழேயே இருக்க வேண்டும். அவற்றை ஒவ்வொரு மாகாணங்களுக் 19 ➤

# ஜனவரி 11

### பாடசாலை ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 22

2021ஆம் ஆண்டு கற்றல் நடவடிக்கைக்காக பாடசாலைகள் ஜனவரி மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக பாடசாலைகள் எப்போது 19 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)

# வார்த்தை ஜாலத்தால் தமிழினத்தை படுகுழியில் தள்ளுகிறார் சுமந்திரன்

## ஐ.நா. விவகாரத்தில் நடந்தவற்றை புட்டு வைக்கின்றார் விக்னேஸ்வரன்



**யாழ்ப்பாணம், டிசெ.22**
**சுமந்திரன் சிலரை எல்லாக் காலத்திலும் முட்டாள் ஆக்கலாம். பலரைச் சிலகாலம் முட்டாள் ஆக்கலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலத்திலும் முட்டாள்கள் ஆக்க முடியாது. அதுவும் அவருக்குச் சட்டம் படிப்பித்த ஆசிரியரை முட்டாள் ஆக்கப் பார்ப்பது குருத் துரோகம் ஆகும்.**
**இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான வி.சி.விக்னேஸ்வரன்.**

அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் உள்ளதாவது-

### முழுப் பொய்

நானும் கஜேந்திரகுமாரும் பொய் சொன்னோம் என்று சுமந்திரன் கூறியுள்ளார். அவர் கூறுவது சரியானதா அல்லது கஜேந்திரகுமாரும், நானும் கூறுவது சரியா என்பதை அவரால் எமக்குக் கையளிக்கப்பட்ட கடித வரைவை மொழிபெயர்த்தால் தெரிந்துவிடும். அவர் அனுமதித்தால் அந்தக் கடிதத்தை மொழி பெயர்த்துக் கொடுக்க முடியும்.

தங்களது பரிந்துரைகள் என்று அவர் அதில் முதலில் கூறியிருப்பது இலங்கை உட்பட மூன்று தடவைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அங்கத்தவர்கள் யாவரதும் சம்மதத்துடன் இயன்றியது போன்ற ஒரு கூட்டத் தீர்மானத்தை 2021ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும் இயற்ற வேண்டும் என்பதே. அதாவது முன்னர் மூன்றுமுறை காலக்கெடு அளித்தது போன்று மேலும் ஒருமுறை காலக்கெடு அளிக்க வேண்டும் என்பதே அதன் அர்த்தம். அதில் எந்த மயக்கமும் இல்லை.

### "அளாப்பும்" சுமந்திரன்

தமது பரிந்துரைகளின் பின்னர், அதனாவது அதற்கு அப்பால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர்களால் முன்னர் செய்த காரியங்களை அவர் குறிப்பிடுகின்றார். அதில் சிரியா பற்றியும் மியான்மர் பற்றியும் குறிப் பிடுகின்றார். ஆனால் அந்த நாடுகள் சம்பந்தமாகச் செய்தது போன்று இலங்கை சம்பந்தமாகவும் பொறிமுறைகளை இயற்றுங்கள் என்று எங்குமே அவர் கூறவில்லை. இதைத்தான் "அளாப்புதல்" என்று கிராமங்களில் கூறுவார்கள். சுமந்திரன் அளாப்புகின்றார்.

எம்மிடம் இருந்து பதில் வரமுன்னரே இந்தக் கடிதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கும், ஏனையோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்று அறிகின்றேன். எமது கருத்துக்களைக் கோரிவிட்டு, அதற்கு முன்னரே அந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தால் அது வருத்தத்துக்குரியது. எனினும் இப்போதும் அனைவரது சம்மதத்துடன் புதிய வரைவை அனுப்பலாம். அத்துடன் மைய நாடுகளுடனும் பேச வேண்டியிருக்கின்றது.

### செய்ய வேண்டியவை

அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறீர்கள்?. பொதுவாக இரண்டு விடயங்களைப் பலர் அடையாளம் கண்டுள்ளார்கள்.

ஒன்று ஐ.சி.சி. எனும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையைப் பாரப்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் அல்லது இலங்கைக்கென நியமிக்கப்படும் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் முன் இலங்கையை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவற்றை சம்பந்தப்பட்ட ஒரு அங்கத்துவ நாட்டின் ஊடாகச் செய்ய வேண்டும். அடுத்தது சர்வதேச சுதந்திர விசாரணைப் பொறிமுறை ஒன்றை நிறுவி அதைக் கொண்டு இலங்கையில் நடந்த மிக ஆபத்தான சர்வதேச் குற்றங் களையும், சர்வதேச சட்ட மீறல்களையும் பற்றிய சாட்சியங்களைச் சேகரித்து அவற்றை ஒன்றுபடுத்தி, பாதுகாத்து அவற்றை ஆய்வு செய்யவும், அவை தொடர்பாக உரிய கோவைகளைத் தயாரித்து சர்வதேச சட்ட முறைக்கேற்றவாறு நியமிக்கப்படும் நீதிமன்றங்களில் அல்லது தீர்ப்பாயங்களில் நடைபெறும் குற்றவியல் நடவடிக்கைகளில் அந்தக் கோவைகளை சமர்ப்பித்து நீதியும், சுதந்திரமானதுமான விசாரணைகளை விரைவாக நடத்த அனுசரணை வழங்கும் விதத்திலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### ஆய்வாளர் கோரலாம்

இதற்கு சமாந்தரமாக சர்வதேச நீதிமன்றத்துக்கு இலங்கையைக் கொண்டு போவது பற்றியும் பரிசீலிக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை ஊடாக விசேட ஆய்வாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், காணி அபகரிப்பு போன்றவற்றைக் கண்காணிக்கவும், ஆராயவும் இவ்வாறான ஆய்வாளர் ஒருவரை நியமிக்கக் கோரலாம்.

### ஒன்றுமையே தேவை

இவை மட்டுமல்ல. ஒரு சுயாதீனமான விசாரணைப் பொறிமுறை ஒன்றையும் அமைத்து, பொறுப்புக்கூறலையும், போர்க் குற்ற செயற்பாடுகளையும் ஆராயுமாறு கோரலாம். இவை பற்றியெல்லாம் ஆராய வெளிநாட்டு சர்வதேச சட்ட வல்லுநர்களுடன் நான் தொடர்பில் இருக்கின்றேன். மைய நாடுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. தமிழர் தரப்பார் யாவரும் சேர்த்து ஒரு கோரிக்கை விடுத்தால் நாம் அதன்படி நடவடிக்கை எடுக்க முடியும் என்று ஜெனிவாவில் இருக்கும் பிரிட்டன் தூதுவர் கூறியுள்ளார். அதனால் நாங்கள் மேலும் கால அவகாசம் கொடுக்காது "ரோல் ஓவர்" என்று முன் னைய கூட்டத் தீர்மானத்தையே பிறிதொரு முறை கொண்டுவராமல் இலங்கைக்கு எதிராகச் செய்ய வேண்டியவற்றை மைய நாடுகளின் துணை கொண்டு செய்ய வேண்டும். அதற்கு சகல தமிழ் தரப்பாரும் ஆதரவு வழங்க முன்வர வேண்டும். எமது ஒன்றுமையே இந்தத் தருணத்தில் எமக்குப் பலமாகும் என்றுள்ளது. (எ)

# காலநீடிப்பு வழங்குவதில்லை விக்னேஸ்வரன் அணி உறுதி!

யாழ்ப்பாணம், டிசெ.22
நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கை அரசுக்கு கால நீடிப்பை வழங்கக்கூடாது என்பதில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி உறுதியாக இருக்கின்றது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது நடைபெறவுள்ள ஜெனிவாக் கூட்டத்தொடரில் தமிழர் தரப்பில் எடுக்கவேண்டிய தீர்மானங்கள் சம்பந்தமாக ஆலோசனை பெறுவதற்காக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நான்கு கட்சிகள் அடங்கிய கூட்டம் ஒன்று கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் மூன்று விடயங்களை முக்கியமாக ஆராய்ந்திருந்தோம். ஜெனிவா கூட்டத்தொடரில் எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும், டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரசியல் தீர்வு யோசனை சமர்ப்பிக்கப்பட வேண்டும், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்ற விடயங்களை ஆராய்ந்திருந்தோம்.

இதில் ஜெனிவா கூட்டத்தொடர் சம்பந்தமாக தமிழர் தரப்பிலிருந்து 3 தமிழ்த் தேசிய பிரதான அணிகளும் சேர்ந்து அதனுடைய 13 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கி ஒரு யோசனைச் சமர்ப்பிக்கும்போது, அந்த யோசனையை இங்கு இருக்கக்கூடிய சிவில் அமைப்புக்கள், மதப் பெரியார்கள், அதேபோல பல்கலைக்கழக மாணவர்கள் போன்ற பல்வேறு அமைப்புகளும் புலம்பெயர் அமைப்புகளும் ஏற்றுகொண்டால் அது ஒரு சிறந்த நிலைப்பாடாக இருக்கும் என்ற ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வந்திருக்கின்றோம்

அந்த யோசனை கால நீடிப்பை மறைமுகமாகவோ நேரடியாகவோ வலியுறுத்துவதாக அமையக்கூடாது என்ற விடயத்தில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம் என்றார். (ஜ-20)

# 46 கிலோ கஞ்சா மன்னாரில் மீட்பு

மன்னார், டிசெ.22
மன்னார் - யாழ்ப்பாணம் ஏ32 பிரதான வீதியில் மேற்கொண்ட வீதிச் சோதனை நடவடிக்கையில் வாகனம் ஒன்றில் இருந்து கஞ்சா மீட்க ப்பட்டுள்ளது என்றும், தொடர் விசாரணையில் மீன்வாடி மற்றும் வளவொன்றில் இருந்தும் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.


கோப்புப் படம்

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல்ல வீரசிங்கவின் பணிப்பின்பேரில் அடம்பன் பொலிஸ் பொறுப்பதிகாரி சீ.ஐ.லக்ஸ்மன் ரணவல ஆராய்ச்சி தலைமையிலான பொலிஸ் குழுவினர் வீதிச் சோதனையில் ஈடுபட்டனர். அந்த வீதி வழியாக வந்த டொல்பின் ரக வாகனம் ஒன்று பொலிஸாரால் சோதனையிடப்பட்டது. வாகனத்தின் இருக்கைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 14 கிலோ 600 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். அந்த வாகனத்தின் சாரதியான. மன்னார் சாந்திபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடையவர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் விடத்தல் தீவில் உள்ள மீன்வாடி ஒன்றில் இருந்து 5 கிலோ 95 கிராம் கஞ்சாவும், மோழி என்னும் மோப்பநாயின் உதவியுடன் நடத்தப்பட்ட தேடுதலில் அங்குள்ள வளவொன்றில் இருந்து 26 கிலோ 790 கிராம் கஞ்சாவும் கண்டு பிடிக்கப்பட்டது. அங்கிருந்த ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளது சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-60)

# வீட்டில் முடங்கியுள்ள சிறுவர்களுக்கு தொற்றாநோய்கள் ஏற்பட வாய்ப்பு

## குழந்தை மருத்துவர் தீபால் பெரேரா எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.22

**கொரோனாத் தொற்றுநோய் காரணமாக வீட்டிற்குள் முடங்கியுள்ள சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் மற்றும் உடல் பருமன் உள்ளிட்ட தொற்றாநோய்கள் வரும் அபாயம் உள்ளது என்று கொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையின் குழந்தை மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது; கொரோனாத் தொற்றுநோயால் மேற்கு உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படவில்லை.

இந்த சூழ்நிலை காரணமாக இன்று பல சிறுவர்கள் வீட்டில் உள்ளனர். அவர்கள் எங்கும் செல்ல வழி இல்லை. எனவே நான் பெற்றோரிடம் ஒரு கோரிக்கை வைக்கிறேன்.

உங்கள் பிள்ளை வீட்டுக்குள் சிக்கிக்கொள்ளாமல், வீட்டின் ஓரத்தில் அல்லது தோட்டத்தில் விளையாட விடுங்கள். காலையில் குறைந்தது 15 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்யும் பழக்கத்தைப் பெறுங்கள். இல்லையெனில் குழந்தைகள் தொற்றா நோய்களால் பாதிக்கப்படக்கூடும். குழந்தைகள் நீரிழிவு, உடல் பருமன் மற்றும் கொழுப்பு போன்ற தொற்றா நோய்களுக்கு முகம் கொடுக்க நேரிடலாம்- என்றார். (ஐ)

# நிராகரிக்கப்பட்டது கொரோனா பாணி

கொழும்பு, டிசெ.22

கொரோனா வைரஸை ஒழிப்பதற்காக கேகாலை மருத்துவரான தம்மிக்க பண்டாரவால் அறிமுகம் செய்யப்பட்ட மருந்து சுகாதார அமைச்சால் நிராகரிக்கப்பட்டுள்ளது. அரசாங்க ஆய்வுத் திணைக்களத்தை மேற்கோள்காட்டி அரச ஊடகமொன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

எனினும் இந் நிராகரிப்புக்கான காரணம் தொடர்பில் தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. இதேவேளை உள்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட மேலும் இரண்டு மருந்து வகைகள் தொடர்பில் தற்போது பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# தேயிலை உற்பத்தி நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு,டிசெ.22

இலங்கையில் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்தவருடம் ஒக்ரோபர் மாதம் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது என்று தரவுகள் தெரிவிக்கின்றன. இதன்படி இந்த வருடம் கடந்த ஒக்ரோபர் மாதம் நாட்டில் 23.4 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 10.3 சதவீதம் அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்பட்டது. கடந்த ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னைய காலப்பகுதியில் கொவிட் -19 பரவல் காரணமாக தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

# எதிர்வரும் 30ஆம் திகதி மாநகர முதல்வர் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 22

2021ஆம் ஆண்டுக்கான பாதீடு தோற்கடிக்கப்பட்டதன் விளைவாக வறிதாக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் பதவிக்கான தெரிவு எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

இதற்கான அறிவித்தலை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்டிருந்த யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான பாதீடு கடந்த 16ஆம் திகதி மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோல்டால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பாதீட்டுக்கு ஆதரவாக 21 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 3 வாக்குகளால் பாதீடு தோற்கடிக்கப்பட்டதால் சட்ட ஏற்பாடுகளுக்கமைய முதல்வரின் பதவி வறிதாக்கப்பட்டது.

அந்த இடத்துக்கு மீண்டும் முதல்வர் ஒருவரைத் தெரிவு செய்யும் வகையில் 2012ஆம் ஆண்டு 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் 66ஏ பிரிவின் கீழ், மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் அடிப்படையில் யாழ். மாநகர சபைக்கு புதிய முதல்வர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது. (ம-20)

# எல்லைக்கற்கள் போடப்படுவதை நிறுத்தவேண்டும்

## வனவளத் திணைக்களத்துக்கு ஆளுநர் இவ்வாறு உத்தரவு

முல்லைத்தீவு, டிசெ. 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் எல்லைக்கற்கள் இடும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறுதியாக வந்த அமைச்சரவைத் தீர்மானத்தின்படி 2001ஆம் ஆண்டுக்கு முதல் பிரதேச செயலாளர்களின் பொறுப்பில் இருந்த அனைத்துக் காடுகளும் மீண்டும் அவர்களுக்குக் கையளிக்கப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என சகல மாகாண காணி ஆணையாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன. இதனை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த நடவடிக்கை முடிவுறுத்தப்படும் வரை வனவளத்திணைக்களம் எல்லையிடும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்றார். (ம-19)

# கோத்தாபயவுக்கு எதிராக கூட்டணி!

## பரந்துபட்ட அளவில் முன்னெடுப்பு என மஹிந்தானந்த கேலிப் பேச்சு

கொழும்பு, டிசெ. 22

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் எதிர்த்தரப்பினர் அனைவரும் இணைந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக பரந்துபட்ட கூட்டணியை அமைத்துக்கொண்டிருக்கின்றனர். இந்தக் கூட்டணியின் தலைமைத்துவத்துக்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட பலர் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்று கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

மக்கள் சந்திப்பொன்றில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது எதிர்தரப்பினர் பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைக்கவுள்ளோம் எனக் கூறிக் கொண்டிருக்கின்றனர். கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிரானதாக அந்தக் கூட்டணி அமையும் என்றும் கூறுகிறார்கள். சம்பிக்க ரணவக்க, அநுரகுமார திஸாநாயக்க, சுமந்திரன், ரிஷாட் பதியுதீன், ரவூப் ஹக்கீம் உள்ளிட்டோரே இந்த கூட்டணியின் அங்கத்தவர்களாவர்.

கடந்த ஐந்தாண்டு காலமாக நாட்டில் பல்வேறு ஊழல் மோசடிகளில் ஒன்றாக ஈடுபட்டவர்களே தற்போதும் ஒன்றிணைந்துள்ளார்கள். இவர்கள் அடிப்படைவாதத்தையும் பயங்கரவாதத்தையும் தூண்டியவர்களாவர். இவர்களே சஜித் பிரேமதாசவுடன் கூட்டணி அமைக்கப் போகிறார்கள்.

இவ்வாறானதொரு கூட்டணி உருவாக்கப்படுவது எமக்கும் மகிழ்ச்சியளிக்கிறது. சம்பிக ரணவக்க, சஜித் பிரேமதாச, மங்கள சமரவீர, சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்டோர் இந்த கூட்டணியின் தலைமைத்துவத்துக்காக காத்துக்கொண்டிருக்கின்றனர் -என்றார். (ம-22)



# காணிகளை மீட்டுத்தருமாறு திருமலையில் கவனவீர்ப்பு

நிலாவெளி 8 ஆம் கட்டையை சேர்ந்த ரசூல் தோட்டத்தின் சுமார் 61 ஏக்கர் நிலப்பரப்பு இதுவரை காலம் மக்கள் பாவனைக்குட்பட்டிருந்த நிலையில் தற்போது சுற்றுலாத்துறைக்குரிய பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு வாழ்ந்த மக்கள் நிர்க்கதியான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில் நேற்று நிலாவெளி பிரதான வீதியில் அமைதியான முறையில் காணியை மீட்டுத்தருமாறு கோரி கவனவீர்ப்பில் ஈடுபட்டார்கள்.

இதுவரை காலம் வாழ்ந்து வந்த மக்களுக்கு எந்தவித மாற்று வசதிகளோ நட்டஈடோ வழங்கப்படாத நிலையில், எந்த அரசியல்வாதிகளோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ உரிய தகுந்த முடிவுகள் எடுக்கவில்லை எனவும் கூறப்படுகிறது. இது தொடர்பில் பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். நிலப்பரப்பு 2015 இல் அரசுடைமையாக்கப்பட்டு சுற்றுலாத்துறைக்கு கையகப்படுத்தப்பட்டுள்ளது. பரம்பரை பரம்பரையாக பூர்வீகக் காணிகளை அரசுடைமையாக்கம் செய்வது தங்களுக்கு கவலையளிக்கின்றது என கவனவீர்ப்பில் ஈடுபட்ட மக்கள் மேலும் தெரிவித்தனர். (ந)

# போக்குவரத்து கட்டுப்பாடுகளை உடன் நடைமுறைப்படுத்துங்கள்

## ஆபத்தை நோக்கி நாடு என எச்சரிக்கிறார் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர்

கொழும்பு, டிசெ.22
நாட்டில் அபாயப் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களிலிருந்து ஏனைய பகுதிகளுக்குச் செல்வோருக்கு கடுமையான போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கோரிக்கைவிடுத்துள்ளார்.மேலும், கிராம பகுதிகளிலிருந்து நகர் பகுதிகளுக்கு செல்கின்ற மக்கள் ஆடை கொள்வனவு உள்ளிட்ட வற்றின்போது பாதுகாப்பு விதி முறைகளைப் பின்பற்றாமல் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. எனவே அபாயமுடைய பகுதிகளிலிருந்து பயணிக்கும் நபர்களுக்கு கடுமையான போக்குவரத்து கட்டுப்பாடு விதிக்கப் படவேண்டும்.
அவ்வாறு கட்டுப்பாடுகள் விதிக்கப் படாது விடின் எதிர்வரும் நாள்களில் மிகப்பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-இ)

# ஐஸ் தொழிற்சாலை தீ விபத்து கட்டுக்குள்

மட்டக்களப்பு, டிசெ.22
மட்டக்களப்பு கல்லடிப் பாலத்துக்கு அருகில் நீண்ட காலமாக கைவிடப்பட்ட நிலையிலுள்ள ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் மாலை தீ விபத்து ஏற்பட்ட நிலையில் அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.
இந்த ஐஸ் தொழிற்சாலை மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு அருகில் அமைந்துள்ளது. இது கடந்த 5 வருடத்துக்கு மேலாக கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரும் இங்கு தீ விபத்து ஏற்பட்டிருந்தது.
நேற்று மழைக்கு மத்தியிலும் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ள நிலையில், இந்தத் தீயை மட்டக்களப்பு மாநகரசபையின் தீயணைக்கும் பிரிவினர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.
இது குறித்த விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற-இ)

**சிறுநீரகம் தேவை**
B,O குருதி வகையை சேர்ந்த சிறுநீரகம் தேவை.
தொடர்பு:076 239 9874

**துயர் பகிர்கின்றோம்**



உரும்பிராய் ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலய 7ஆம் திருவிழா (தங்கரதம்) உபயகாரரும். ஆலய திருப்பணிக்கு உதவி புரிந்து வருபவர்களான **திரு.த.சுரேஸ்குமார் (சுரேஸ்), திரு.த.கோணேஸ்** ஆகியோரின் அன்புத் தாயாருமான
**அமரர் பாக்கியம் தர்மலிங்கம்**
(நிம்மதி வீடு)
அவர்களது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் தாயாரின் ஆத்மா சாந்தியடைய கற்பகவிநாயகரை பிரார்த்தனை செய்கிறோம்.
**பரிபாலன சபையினர்,**
**ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்**
**உரும்பிராய்.**

**9 ஆம் ஆண்டு நினைவலைகள்**



**வைத்தியகலாநிதி**
**மரிசலீன்பிள்ளை**
**மரியதாசன்** (J.P)
**(பேரின்பம் வல்வெட்டித்துறை)**
(சுகாதார வைத்திய அதிகாரி (M.O.H)
யாழ் மாநகரசபை
(2001 - 2011)
**தோற்றம்** 12.07.1942
**மறைவு** 22.12.2011
எங்கள் அன்பே
நீங்கள் எங்கே - உங்களை
காணாமல் தவிக்கும்
உறவுகள் இங்கே. (பேரன் - அருணன்)
"ஆவே மரியா"
72, கோயில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கண்ணீர் மல்க
குடும்பத்தினர்.



# ஜனாஸா எரிப்புக்கு எதிராக மழை நடுவே போராட்டம்

கல்முனை,டிசெ.22
ஜனாஸா எரிப்புக்கு எதிராக, வெள்ளைத் துணி கவனவீர்ப்புப் போராட்டம், கல்முனையில் கொட்டும் மழைக்கு மத்தியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப் பட்டது. கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எம். றியாஸின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.
போராட்டத்தில் ஜனாஸா எரிப்புக்கு எதிரான வாசகங்கள் மும்மொழிகளிலும் காட்சிப்படுத் தப்பட்டன.
"ஜனாஸாவை அடக்க அனுமதி தா. நல்லடக்கம் எங்கள் அடிப்படை உரிமை அதை மறுப்பது சர்வாதிகாரம், விஞ்ஞானத்தை ஏற்றுகொள் இனவாதத்தைக் கை விடு, இனவாதிகள் அல்ல நிபுணர்கள் சொல்வதைக் கேட்டு நட, இனவாதமாக இல்லாமல் விஞ் ஞான ரீதியாகச் செயற்படு" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர். (க-இ)

# வெள்ளத்தால் பாதித்தோருக்கு உலருணவு பொருள்கள்



சாவகச்சேரி, டிசெ.22
சாவகச்சேரி, கோவில்குடியிருப்பு பிரிவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 75 குடும்பங்களுக்கு சாவகச்சேரி பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.
தொழிலதிபர் ஒருவரின் நிதிப்பங்க ளிப்பில் தலா 2 ஆயிரம் ரூபா பெறு மதியான உலர்உணவு பொருள்களே இவ்வாறு வழங்கப்பட்டன. (ச-9)

**31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



தோற்றம் 08 . 03 . 1957
மறைவு 22 . 11 . 2020
**அமரர்**
**தியாகராசா சிவநேசன்**
அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த (20.12.2020) ஞாயிற்றுக்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. இன்று (22.12.2020) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நடைபெறவுள்ளதை அறியத்தருவதோடு, அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**கலட்டி வீதி, கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**
**திருமதி சிவநேசன் இந்துமதி**
**(மனைவி)**

# வெற்றிலைத் துப்பலால் ஒரு குடும்பமே தனிமையில்!

கொழும்பு, டிசெ.22
கொரோனாத் தொற்றுக்குள்ளான பெண் ஒருவர் வெற்றிலை எச்சிலைத் துப்பிய நிலையில், எச்சில் விழுந்த இருவர் உட் பட அவர்களது குடும்ப அங்கத்தவர்களும் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.
கொழும்பிலிருந்து கொரோனாத் தொற்றாளர்கள் சிலர் அண்மையில் விசேட பஸ் மூலம் பலங்கொடை சமனலவெவ பகுதியிலுள்ள தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதன்போது பலாங்கொடை கல்தொட்டை, மிரிஸ்வத்த பகுதியில் வைத்து அந்த பஸ்ஸின் ஜன்னலைத் திறந்த கொரோனாத் தொற்றுடைய பெண் வாயிலிருந்த வெற்றிலை எச்சிலை வெளியே துப்பியுள்ளார். பஸ் அருகே பயணித்த மோட்டார் சைக்கிளில் இருந்த இருவர் மீது இந்த வெற்றிலை எச்சில் விழுந்ததை அடுத்து பொதுச் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு இணங்க அவர்களும் அவர் களது குடும்ப உறுப்பினர்களும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக் கப் படுகின்றது. (ந-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மலைகளின் மர்மமென்ன?

யாழ்ப்பாணம் நகரப் பகுதி திடீர் என்று நேற்றுமுன்தினம் தேசிய ரீதியில் கவனக்குவிவைப் பெற்றது. அதுவொன்றும் 'ஆஹா ஓஹோ' என்று நடந்த சம்பவமும் அல்ல சுயதம்பட்டம் அடிக்கக்கூடிய வகையிலான நிகழ்வும் அல்ல. வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயம் அது. யாழ்ப்பாணம் மாநகர வடிகால்களில் இருந்து எடுக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள் மலைபோல் குவிக்கப்பட்டதால் வந்த கவனக்குவிவு அது.

ஆக, ஒரு பிற்போக்கான உதாரணத்தை யாழ்ப்பாணம் ஒட்டுமொத்த இலங்கைக்கும் வழங்கிவிட்டது. இந்த ஒளிப்படங்கள் சமூக வெளிகளில் பதிவேறியதும் தான் தாமதம் யாழ்ப்பாண நகர மக்கள் மீது சேறுவாரித் தூற்றுவதற்கு பலரும் புறப்பட்டு விட்டனர். 'உப்பை உண்டால் தண்ணீர் அருந்தத்தான் வேண்டும்' என்ற அடிப்படையில் இந்த விமர்சனங்கள் ஏற்கத்தக்கவையாக அமைந்தாலும், 'எய்தவன் இருக்க அம்பை நோவது ஏன்?' என்ற பழமொழியும் அங்கு கற்பிதம் செய்கின்றது.

வடக்கு மாகாணத்தின் பல முக்கிய வலைப்பின்னல்கள் யாழ்ப்பாணம் நகரப் பகுதியுடன் தொடர்புபட்டவையாக இருக்கின்றன. மருத்துவத் தேவை, வணிக வளாகங்கள், வங்கிகளின் குவிவு, பல்பொருள் அங்காடிகள், மத்திய பேருந்து நிலையம் என யாழ்ப்பாணம் நகரப் பகுதி தினமும் பல்லாயிரம் மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு பல்லாயிரம் மக்கள் தினமும் பயன்படுத்தும் ஒரு வர்த்தகத் தலைநகரத்தில் கழிவுகளின் வெளிப்பாடும் பல மடங்கு இருக்கும் என்பது இயற்கையே.

ஆனால், அத்தகைய நகரமொன்றில் கழிவகற்றும் பொறிமுறையை எந்தளவுக்கு உச்சக்கட்ட முக்கியத்துவம் கொடுத்துப் பேணவேண்டும் என்று சிந்தித்துப் பாருங்கள். யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளில் எத்தனை இடங்களில் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதற்குரிய தொட்டிகள் முறையாக வைக்கப்பட்டு பேணப்படுகின்றன?. அனுதினமும் பல்லாயிரம் மக்களின் பயன்பாட்டில் உள்ள இந்த இடத்தில் கழிவகற்றலுக்கு வைக்கப்பட்டுள்ள தொட்டிகள் உண்மையில் போதாது. இவ்வாறான நிலையில் பொதுமக்கள் தமது பிளாஸ்டிக் கழிவுகளை தம்முடனேயே செல்லும் இடங்களுக்கெல்லாம் எடுத்துச் செல்ல முடியுமா? மிகமிக இலகுவான பொறிமுறைகள் ஊடாகச் செய்யவேண்டிய விடயங்களை அந்தந்த நேரத்தில் செய்யாமல் தவறவிட்டுவிட்டு பின்னர் ஒரே நாளில் குத்தி முறிவதால் என்ன நடந்துவிடப் போகின்றது?.

அண்மையில் வீசிய புரேவி புயல் காரணமாக கொட்டித்தீர்த்த மழையால் யாழ்ப்பாணம் நகரப் பகுதி வெள்ளக் காடானது. நீண்ட நேரமாக மழைநீர் வழிந்தோட வழியின்றி வீதிகளில் வெள்ளம் தேங்கியது. இவ்வாறான பிளாஸ்டிக் கழிவுகள் கால்வாய்களில் தேங்கிநின்றால் எங்கிருந்து வெள்ளம் வழிந்தோடும்? இந்தக் கழிவுகளில் தேங்கும் தண்ணீரில் நுளம்பு பெருகக்கூடிய ஏதுநிலை இருந்தால் டெங்கு ஆபத்து வலயமாகத்தானே யாழ். நகரப்பகுதி இருக்கும். தீதும் நன்றும் பிறர்தர வாரா என்பது கணியன் பூங்குன்றனாரின் கூற்று. அதாவது ஒருவருக்கு ஏற்படும் நன்மையும் தீமையும் அவரவர் செயல்களே அன்றி பிறரால் வருவன அல்ல என்பது இதன் பொருள். எதற்கு எது பொருந்துகிறதோ இல்லையோ மலைமேடுபோல் குவிந்த பிளாஸ்டிக் கழிவுகளும் அது ஏற்படுத்திய - ஏற்படுத்தப்போகின்ற ஆபத்துகளும் நன்றாகவே பொருந்துகின்றன.

தீர்வு எம்மிடத்திலேயே உள்ளது. மக்களும், மாநகர சபையும் 'இது எங்கள் நகரம். அதை தூய்மையாக வைத்திருப்பது நம் பொறுப்பு' என்ற ரீதியில் செயற்பட்டால், யாழ்ப்பாணம் உலகின் தூய்மையான நகரமாகச் சொல்லப்படும் சிங்கப்பூரை விடவும் சுத்தமாக இருக்கலாம்.. ஆனால் அதை எவ்வளவு தூரம் செயற்படுத்தப் போகிறோம் என்பதுதான் தற்போதுள்ள கேள்வி.

# அனைவரும் ஏற்றுக்கொள்ளும் அரசமைப்பே உருவாக்கப்படும்

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.22

**புதிய அரசமைப்பு அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் உருவாக்கப்படும். வரலாற்று ரீதியான தவறுகள் இம்முறை திருத்திக் கொள்ளப்படும். என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கை பல்லின சமூகம் வாழும் நாடு அனைத்து இன மக்களின் அபிலாசைகளும் அரசமைப்புக்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

தேசிய பாதுகாப்பு, மற்றும் இறையாண்மை ஆகிய அடிப்படைக் காரணிகள் அரசமைப்பில் முக்கியமானவை இவற்றில் தனிப்பட்ட மக்களின் காரணிகள் செல்வாக்குச் செலுத்தாது. இலங்கையின் அரசமைப்பு ஒற்றையாட்சி தன்மைக்குட்பட்டது. ஆனால் ஒரு தரப்பினர் சமஷ்டியாட்சி அடிப்படையில் அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். அது அவர்களின் தனிப்பட்ட மற்றும் கட்சி நிலைப்பாடாகும். இலங்கையின் அரசமைப்பு சமஷ்டியாட்சி தன்மையில் உருவாக்க முடியாது என்பதற்கு அரசியல் மற்றும் பௌதீக காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆகவே சமஷ்டியாட்சி அரசமைப்பு என்பது சாத்தியமற்றது.

புதிய அரசமைப்பை உருவாக்குவது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தின் பிரதான இலக்காகும் - என்றார். (ப)

# வீடுகளில் இருந்தவாறே நத்தாரைக் கொண்டாடுக

## பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ.22

நத்தார் பண்டிகையின் போது வீட்டிலேயே இருக்குமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சுகாதார ஆலோசனைகளுக்கு எதிராக பண்டிகை காலப் பகுதியில் செயற்பட்டால் நாடு முழுவதும் கொரோனா கொத்தணிகள் ஏற்படக் கூடும். எதிர்வரும் ஓரிரு நாள்களில் நத்தார் பண்டிகை ஆரம்பமாகிறது. அத்துடன் புத்தாண்டும் பிறக்கவுள்ளது. இந்த நாள்களில் பலர் தேவையற்ற சுற்றுலாப் பயணங்கள் செல்கின்றனர். உறவினர்கள் வீடுகளுக்குச் செல்கின்றனர். அதே போன்று விருந்துகள் நடத்துகின்றனர். எனினும் தற்போது உள்ள நிலைமைக்கு மத்தியில் அவ்வாறு செய்வது பொருத்தமானதல்ல. அதனால் மக்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட்டு, அனைத்தையும் தவிர்த்து வீட்டில் இருந்து நத்தாரைக் கொண்டாட வேண்டும்.

நத்தார் தினத்தன்றும் தேவாலயங்களில் அனைவரும் ஒன்றுக்கூட வேண்டாம். அனைவரும் வீட்டில் இருந்தால் கொரோனா பரவலைத் தடுக்க முடியும் - என்றார். (ப)

# விமான சேவை பணியாளர்களுக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, டிசெ.22



கட்டுநாயக்க விமானத் தளத்தில் இயங்கும் ஸ்ரீ லங்கன் விமான சேவையில் உணவு விநியோகப் பிரிவில் உள்ள 31 பணியாளர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவை உணவு விநியோக பிரிவில் உள்ள 324 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 31 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து ஏனையவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ-இ)

# காளி அம்மனை இழிவுபடுத்திய பெண்ணுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, டிசெ.22

இந்து மதத்தின் தெய்வமான காளியம்மன் தொடர்பில் முகநூலில் இழிவாக, அவதூறாகப் பதிவுகளை இட்ட பெண்ணுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மலையக இந்து குருமார் ஒன்றியத்தின் செயலாளரும் அகில இலங்கை இந்து சபாவின் தலைவருமான சிவஸ்ரீ சுரேஸ்வர சர்மா ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரதிகள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, இந்து சமய விவகார அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஒரு பெண்ணாக இருந்து கொண்டு பெண் தெய்வத்தை இவர் இழிவுபடுத்தியுள்ளார். அதனை எவராலும் மன்னிக்கவும் மறுக்கவும் முடியாது. முழு பெண்ணினத்துக்கே அவமானம் ஏற்படும் வகையில் அவர் பதிவுகளை இட்டுள்ளார். இரு மதங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்தி இந்த நாட்டில் அவர் மதப் பிணக்கை ஏற்படுத்த முனைகிறார். அத்தோடு இந்நாட்டில் அனைத்து மதம் சார்ந்தவர்களும் சகவாழ்வுடன் வாழ்கின்ற நிலையில் இவர் இவ்வாறு செய்திருப்பது இந்நாட்டில் மதவாதத்தை ஏற்படுத்தி சமாதானத்தை சீர்குலைப்பதாக உள்ளது. எனவே இவரைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் இதற்கு எதிராக நாங்கள் அணி திரண்டு போராட வேண்டிய நிலை ஏற்படும் - என்றார். (ப)

# பொறுப்பற்ற செயற்பாடுகளால் டெங்கு நுளம்பு பரவும் அபாயம்

## யாழ்.போதனா பிரதிப் பணிப்பாளர் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ.22

**பொதுமக்களின் சில பொறுப்பற்ற செயற்பாடுகளால், டெங்கு நுளம்பு எமது பிரதேசத்தில் பெருகலாம் என யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.**

யாழ். மாவட்டத்தில் தற்போதைய டெங்கு நிலைமை தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

தற்பொழுது பெய்யும் பருவ மழையால். எதிர்வரும் வாரங்களில் டெங்கு நோய் பரவல் ஏற்படலாம். எனினும் யாழ்.போதனா மருத்துவமனையில் இம்மாதம் எந்த நோயாளியும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் பொதுமக்களின் பொறுப்பற்ற சில செயற்பாடுகளால் டெங்கு நுளம்பு எமது பிரதேசத்தில் பெருகலாம். குறிப்பாக மழை பெய்த பின்னர் வீதியோரங்களில் திண்மக் கழிவுகளை வீசி விட்டுச் செல்லும் சம்பவங்கள் தற்போது மீண்டும் ஆரம்பித்துள்ளன. இது மிகவும் பாரதூரமான விடயமாகும்.

ஏனெனில் கொரோனா பரவுகின்ற காலத்தில் நாங்கள் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் மருத்துவ சேவைகளைத் தொடந்து நடத்தி வருகின்றோம். டெங்கு நோயாளர்கள் அதிக அளவில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படாமல் இருப்பதற்கு பொதுமக்கள் மத்தியில் முன்கூட்டியே விழிப்புணர்வுவை ஏற்படுத்த வேண்டும். பொதுமக்களுக்கு டெங்கு நோய் அறிகுறிகள் இருந்தால் அவர்கள் உடனடியாக மருத்துவமனையில் குருதிப் பரிசோதனை செய்வதன் மூலம் அதற்குரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளலாம் - என்றார். (ப)



# கனரக வாகனம் மோதி வரவேற்பு வளைவு சேதம்!!

வவுனியா,டிசெ.22

வவுனியா சூடுவெந்தபுலவு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில், வீதியில் அமைக்கப்பட்டிருந்த வரவேற்பு வளைவு முற்றாக சேதமடைந்துள்ளது.

குறித்த பகுதியால் சென்றுகொண்டிருந்த கனரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து, வீதியின் கரையில் அமைக்கப்பட்டிருந்த வரவேற்பு வளைவுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்து தொடர்பான விசாரணைகளை பாவற்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-110)



# வீதி சீரமைப்புக்கு அடிக்கல் நடல்

கொடிகாமம்,டிசெ.22

ஜே/305 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சாவகச்சேரி மகளிர் கல்லூரி முதலாம் குறுக்கு வீதி சீரமைப்புக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

நிறைவான கிராமத் திட்டத்தின் கீழ் 1.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் இந்த வீதி சீரமைக்கப்படவுள்ளது. (ஜ-159)



பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பாவனைக்கென ஒரு தொகை கொவிட் - 19 தொடர்பான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வேலும் மயிலும் அறக்கட்டளை நிறுவனத்தினரால் அந்தத் துண்டுப் பிரசுரங்கள், மருத்துவ அத்தியட்சகரிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன. (ப)

# சுவரோவியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் திறப்பு


கிளிநொச்சி, டிசெ.22

மத்திய கலாசார நிதியத்தின் நிறுவுநர் கலாநிதி ரோலண்ட் சில்வாவின் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட தம்புள்ள கலாநிதி ரோலண்ட் சில்வா சுவரோவியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இது இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதலாவது நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சுவரோ வியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி மற்றும் தகவல் மையமாகும். மத்திய கலாசார நிதியத்தால் 100 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மையமானது இலங்கையின் புராதன சுவரோவியங்களைப் பிரதி செய்து பாதுகாக்கும் அறிவியல் ஆய்வுகூடமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டில் பிறந்த கலைஞர்கள், பாதுகாவலர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்காக இந்த மையம் நிறுவப்பட்டுள்ளமை இலங்கைக்கு பெரும் சாதனையாகும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த மையத்தினுள் விரிவுரை அரங்குகள், கேட்போர் கூட வசதிகள், டிஜிட்டல் காப்பகம், இரு பரிமாண மற்றும் முப்பரிமாண காப்பகம், அவசரகால சுவரோவியப் பாதுகாப்பு சிகிச்சை பிரிவு மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கான குடியிருப்பு மற்றும் பிற வசதிகள் என்பன காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ப)





# வியாபாரிக்கு தொற்றில்லை

சாவகச்சேரி,டிசெ. 22

சாவகச்சேரி பொதுச் சந்தை பழவகைகள் வியாபாரிக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொதுச் சந்தையில் பழவகைகள் விற்பனை செய்யும் நபர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு படுக்கையில் உயிரிழந்தார்.

இதனையடுத்து சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று கண்டறியப்பட்டுள்ளது. (ஜ-9)

# வவுனிக்குளம் குளக்கட்டில் பொலிஸ் கண்காணிப்பு தேவை

## மக்கள் கோரிக்கை

வவுனியா, டிசெ.22

வவுனிக்குளத்தில் வான் பாய்ந்து வருவதால் குளக்கட்டுக்கு பொலிஸ் கண்காணிப்பு தேவை என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளத்தின் நீர் மட்டம் உயர்ந்து வான் பாய்ந்து கொண்டிருக்கின்றது. இதனைப் பார்ப்பதற்காக பல இடங்களில் இருந்து நாள்தோறும் மக்கள் செல்கின்றார்கள். கடந்த 19 ஆம் திகதி குளக்கட்டில் கப் வாகனம் தடம் புரண்டதில் மூவர் உயிரிழந்தனர். அதைத் தொடர்ந்து குளக்கட்டு ஊடாக வாகனங்கள் செல்வதை நீர்பாசனத் திணைக்களத்தினர் தற்காலிகமாகத் தடுத்துள்ளார்கள். இதேவேளை குளத்தில் குளித்தல், மீன்பிடித்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்று நீர்பாசனத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. நாள்தோறும் இளைஞர், யுவதிகள், சிறுவர்கள், முதியவர்கள் எனப் பலர், தூர இடங்களில் இருந்து வான்பாயும் காட்சியைப் பார்வையிடச் செல்வதால் வவுனிக்குளம் குளக்கட்டில் பொலிஸாரின் கண்காணிப்புத் தேவை என மக்கள் கேட்டுக்கொண்டனர். (ப-19)

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# புரேவி புயல் தாக்கத்தால் 1025 ஏக்கர் நெற்பயிரழிவு

**கிளிநொச்சி,டிசெ.22**

**கிளிநொச்சி மாவட்டத்தில் புரேவி புயல் காரணமாக ஆயிரத்து 25 ஏக்கர் நெற்செய்கையும், 400 ஏக்கர் மேட்டுநிலப் பயிர்களும் அழிவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புரேவி புயலால் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுகளில் 84 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 122 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 4 வீடுகள் முழுமையாகவும், 280 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

காலபோக செய்கையில் ஆயிரத்து 25 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளது. 400 ஏக்கர் மேட்டு நிலப் பயிர்களும், 150 ஏக்கர் பழப் பயிர்களும், மரக்கறிச் செய்கைகளும் அழிவடைந்துள்ளன.

அத்துடன் 483 படகுகள் சேதமடைந்துள்ளன. ஆயிரத்து 173 மீன்பிடி உபகரணங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நாச்சிக்குடாவில் 6 வாடிகளும், பச்சிலைப்பள்ளி கிராலி பகுதியில் இரண்டு வாடிகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)



கிளிநொச்சி உதயநகர் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பின் ஊடாக தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. போரால் கை, கால்கள் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள குறித்த பெண்ணின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த உதவி வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

## இந்த வருடத்தில் 61,300 பேர் போதைப்பொருளுடன் கைது



கொழும்பு, டிசெ.22

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஹெரோய்ன், கஞ்சா மற்றும் ஐஸ் ரக போதைப்பொருள்களுடன் 61ஆயிரத்து300 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ஆயிரத்து 605 கிலோகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன் 13ஆயிரத்து 896 கிலோ கஞ்சாவும், 802 கிலோ ஐஸ் ரக போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)



### மடுத்தினார் சிறிய குருமட அதிபராகப் பணியாற்றிய

## பாஸ்கரன் அடிகளாருக்கு வழங்கப்பட்டது இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாணம் புனித மடுத்தினார் சிறிய குருமடத்தின் அதிபராகப் பணியாற்றிய அருட்திரு பாஸ்கரன் அடிகளார் இடமாற்றம் பெற்றுள்ளார். இவர் மாவீரர் தினத்தை நினைவேந்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட வேளையில் கைதுசெய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இடமாற்றத்தை அடுத்து புனித மடுத்தினார் சிறிய குருமடத்தின் புதிய அதிபராக அருட்திரு அன்ரனி ஜெயரஞ்சன் அடிகளார் பொறுப்பேற்றுள்ளார். இவருடன் இவரின் பணிக்கு துணையாக அருட்திரு எம்.ஏ.ஜெராட் அடிகளாரும் நியமனம் பெற்றுள்ளார். (ம-இ)

## சிறுமியை துஷ்பிரயோகம் செய்த முதியவருக்கு 12 ஆண்டுகள் சிறை



கொழும்பு, டிசெ.22

7 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்த 64 வயது முதியவருக்கு 12 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி உயர் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க தலைமையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த முதியவருக்கு எதிராக இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன்போது குற்றத்தை ஒப்புக்கொண்ட முதியவருக்கு 12 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை ,ரூபா 40 ஆயிரம் தண்டம் ஆகியவற்றுடன் சிறுமிக்கு இழப்பீடாக ரூபா 3 லட்சம் வழங்க வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது. (ஐ-இ)

## சுற்றுலா பயணிகளுக்கு கொரோனா உறுதியானால் 14 நாள்கள் தனிமை

*இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவிப்பு*



கொழும்பு, டிசெ.22

விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்படவுள்ள நிலையில் சுற்றுலாப் பயணிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதியானால் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் முடித்த பின்னரே நாட்டுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று ஆரம்ப சுகாதார மற்றும் கொரோனா கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

"வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தனிமைப்படுத்தல் நடைமுறைகளைப் பின்பற்றுவதை அவதானிப்பதற்கும் அவர்களுக்கு பரிசோதனைகளை மேற்கொள்வதற்குமான திட்டங்கள் விமான நிலையத்தில் உள்ளன. தனிமைப்படுத்தல் காலமான 14 நாள்கள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, சுற்றுலாப் பயணிகள் தமது சுற்றுலா தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட முடியும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 22.11.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி
அமரர் சுப்பிரமணியம் பூமணி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.12.2020) செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் காரைநகர் பாலாவோடை அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாராது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாலாவோடை வீதி,
விளானை களபூமி,
காரைநகர்.

குடும்பத்தினர்
மகன் - 077 777 0394
சகோதரி - 077 749 7461
021 225 1936

# பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு கொரோனா

## நாடுமுழுவதும் தொற்றுப் பரவும் ஆபத்து

கொழும்பு,டிசெ.22

கொழும்பு கொலன்னாவை பெற்றோலிய கூட்டுத்தாப னத்தின் 14 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



இந் நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் ஊடாக நாடு முழுவதும் கொரோனா பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என தேசிய ஊழியர் சங்கத்தின் பிரதி அமைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த 19 ஆம் திகதி 14 ஊழியர்களுக்கு கொரோனா நோய் தொற்றியுள்ளது. நிறுவனத்தின் மொத்த ஊழியர்களில் இதுவரை 48 பேருக்கு மாத்திரமே பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் 80 வீதமான தனியார் கொள்கலன்களிலேயே எரிபொருள் ஏற்றிச் செல்லப்படுகிறது. இந்த கொள்கலன் சாரதிகள் ஊடாக நாடு முழுவதும் கொரோனா பரவும் ஆபத்து உள்ளது - என்றார். (ஐ-இ)



ஜேர்மன் நாட்டில் வசித்து வரும் மனோகரன் சுகுணாவதி தம்பதிகளின் புதல்வி கஜானாவின் பிறந்ததினத்தை முன்னிட்டு வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் கிராமத்தில் வசிக்கும் வறிய குடும்பத்தைச்சேர்ந்த 3பெண்பிள்ளைகளைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு பாடசாலை மாணவிகளின் போக்குவரத்துச் சிரமத்தை நீக்குவதற்காக சைக்கிள் ஒன்று அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (ச -222)

## புத்தளம் கடற்பகுதியில் 1,900 கிலோ மஞ்சள் மீட்பு

புத்தளம்,டிசெ.22

புத்தளம் முந்தல் சின்னப்பாடு கடற்பகுதியில் இருந்து சட்டவிரோதமாக இந்தியாவில் இருந்து நாட்டுக்கு எடுத்துவரப்பட்ட ஆயிரத்து 900 கிலோ மஞ்சளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின்போதே 59 உரப்பைகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் மஞ்சள் கைப்பற்றப்பட்டது.

இந்த மஞ்சள் தொகை 110 லட்சம் ரூபாவையும் விட அதிக பெறுமதியுடையது என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் தப்பி ஓடியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த மஞ்சள் தொகையை மேலதிக விசாரணைகளுக்காக கடற்படையினர் சுங்க திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர். (ஐ-இ)

## வேட்டையாடப்பட்ட பசுக்கன்று; இதுவரை நடவடிக்கையில்லை

### ஊர்காவற்றுறை மக்கள் குற்றச்சாட்டு

ஊர்காவற்றுறை, டிசெ.22



ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு ஜே/55 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் கால்நடை வளர்ப்பாளர் ஒருவருக்குச் சொந்தமான 3 மாதங்கள் நிரம்பிய பசுக்கன்றொன்று அண்மையில் திருடப்பட்டு இறைச்சியாக்கிய சம்பவம் தொடர்பில் இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த பசுக்கன்று கடந்த 8ஆம் திகதி உரிமையாளரின் வீட்டு முற்றத்திலிருந்து திருடப்பட்டு, இறைச்சியாக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் அதன் உரிமையாளர் சந்தேகநபர்களாக இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார். எனினும் இதுவரைக்கும் சம்பவம் தொடர்பில் எதுவிதமான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என பாதிக்கப்பட்டவரும், அயலவர்களும் கவலை தெரிவித்தனர். அத்தோடு இதுபோன்று தீவகத்தில் மாடுகள் இறைச்சிக்காக திருடப்படுவது தொடர்கிறது என்றும் இதற்கு முடிவு கட்ட பொலிஸார் பாரபட்சமின்றி விரைவான நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரினர். (ப)



## பாரம்பரிய நூல்கள் வெளியீடு

மன்னார், டிசெ.22

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் மன்னாரில் மூன்று நூல்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வெளியிடப்பட்டன.

நிகழ்வு மன்னார், அடம்பன் மாந்தை வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் இடம் பெற்றது. இதன்போது மன்னார் நெருங்கண்டல் கிராம மக்களின் 'புனித அந்தோனியார் நாடகம்' மன்னார் இத்திக்கண்டல் சீனிப்புலவர் எழுதிய 'புனித செபஸ்தியார் வாசகப்பா', நானாட்டான் பெஞ்சமின் செல்வம் எழுதிய 'மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரன்' ஆகிய மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன.

நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், மன்னார் மாவட்டச் செயலர் அ.ஸ்ரான்லி டிமெல், மேலதிக மாவட்டச் செயலர் சி.குணபாலன், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ப-56)

## புதிய நிர்வாகம் தெரிவு

ஒடிகாமம், டிசெ. 22

கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதன் தலைவர் தி. பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் அந்த நிறுவனத்தின் செயற்றிட்டங்கள் மற்றும் கணக்கறிக்கை என்பன ஆராயப்பட்டன. தொடர்ந்து புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற்றது. அதில் தலைவராக தி.பிரபாகரனும், செயலாளராக தி.சிரூபனும், பொருளாளராக கோ. பரணிதரனும், உபதலைவராக அ.கேதீஸ்வரனும், உப செயலாளராக மு.அமிர்தமந்திரனும், உறுப்பினர்களாக ச.மோகனபவன், கி.சின்னராசா, மு.சிறீதர், வ.வைகுந்தன், திருமதி கி.தர்மிலா, கு.யோகேந்திரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். ஆலோசகர்களாக அ.கனகரத்தினம், ப.அரியரத்தினம், பொன் நித்தியானந்தன் ஆகியோரும், உள்ளகக் கணக்காய்வாளராக சுஜாத்குமா ரும் தெரிவு செய்யப்பட்டனர். (ப-159)



## கிளிநொச்சி சந்தையை மீள இயக்கக் கோரிக்கை

கிளிநொச்சி,டிசெ.22

கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகம் ஏனைய பகுதிகளை விட விஸ்தீரமானது. எனவே தனிநபர் இடைவெளியுடன் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்குமாறு, பொதுச்சந்தை வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தக சங்கத்தின் தலைவர் யேசுராஜன் தெரிவித்ததாவது.

கொவிட்- 19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு வடக்கு மாகாணம் முழுவதும் சந்தைகளைப் பூட்டுமாறு சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியிருந்தனர். இதனால் கிளிநொச்சி பொதுச் சந்தையில் 400க்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எமது சந்தைப் பகுதி தனிநபர் இடைவெளி பேணக்கூடிய பரந்த பிரதேசம்.

இந்த விடயத்தில் சுகாதாரத் தரப்பினரும், மாவட்ட செயலர் மற்றும் கரைச்சி பிரதேச சபையினரும் கவனம் செலுத்த வேண்டும். எமது கோரிக்கை தொடர்பில் பரிசீலனை செய்து பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (க-6)



## மாஸ்க் அணியாதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

வவுனியா, டிசெ.22

முகக்கவசம் அணியாது வீதிகளில் நடமாடுபவர்களுக்கு எதிராக நாடுமுழுவதும் பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந் நிலையில் நேற்றுமுன்தினம் வவுனியா நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது முகக்கவசம் அணியாமல் வாகனங்களில் பயணிப்போருக்கு எதிராக, வவுனியா பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர். (ஐ-110)

# கிளிநொச்சி வருகிறார் இந்திக்க அனுருத்த

கிளிநொச்சி,டிசெ.22
கிராமிய, உள்ளீடு அபிவிருத்தி, கட்டத் துறைசார் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த இன்று கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளார்.
கிளிநொச்சி மாவட்டத்தில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் வேலைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் நிலவரங்கள் தொடர்பாக மேற் பார்வை செய்வதற்காக அவர் வருகை தருகிறார்.
கிளிநொச்சி மற்றம் முகமாலைப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டுவரும், கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்க ளுடன் களத்தரிசிப்புக்களை அவர் மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# வீதியோரங்களிலும் வியாபாரத்துக்கு தடை

வவுனியா, டிசெ. 22
வவுனியா நகரப் பகுதியில் வீதியோரங்களில் வியாபார நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
கொவிட்-19 தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, வவுனியா நகர சபையால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
எனவே வீதியோரத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு நகரசபை யினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)

# போலி காசுகளுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு,டிசெ.22
பொல்பித்திகம பகுதியில் போலி நாணயத்தாள்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து நேற்றுமுன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரிடமிருந்து 5000 ரூபா மற்றும் 1000 ரூபா நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். மாலுலிய பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொல்பித்திகம பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஜ-இ)

# தனிமையை நிறைவு செய்தால் வாய்ப்பு

கொழும்பு, டிசெ.22
வெளிநாடுகளில் இருந்து வருகை தந்து தனிமைப்படுத்தலை நிறைவு செய்த பயணிகளுக்கு 2021 ஆம் ஆண்டு 16 ஆம் திகதி வரையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தீர்வையற்ற கடைத் தொகுதிகளில் பொருள்களைக் கொள்வனவு செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு உட்பட்ட காலத்தில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்தவர்களுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோரை பதிவுசெய்வது அரசின் நோக்கம் இல்லை

## ஊடக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.22
**சமூக ஊடக ஒழுங்குமுறை தொடர்பாக வெளியாகும் செய்திகள் உண்மையான அர்த்தத்தை தெரிவிக்காமல் மோசமான முறையில் சித்தரிக்கப்பட்டுள்ளன என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
சமூக ஊடகங்களை பயன்படுத்துவோரை பதிவுசெய்வது அரசாங்கத்தின் நோக்கம் இல்லை. அத்தோடு வெளிநாட்டு டிஜிட்டல் செயற்பாட்டாளர்களைப் பதிவுசெய்வதையே அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. இந்த டிஜிட்டல் பன்னாட்டு கூட்டு நிறுவனங்கள் உள்ளூர் வணிகங்களைப் பெரிதும் பாதிக்கின்றன. இது நடுத்தர நிறுவனங்களை நேரடியாகப்பாதிக்கிறது. இலங்கையில்உள்ளமுன்னணி தொழில் நிறுவனங்களால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பரிசீலனைகள் இடம்பெறுகின்றன - என்றார். (ப)

# பல்கலை மாணவருக்கான பதிவு இன்றுவரை நீடிப்பு

கொழும்பு, டிசெ.22
பல்கலைக்கழகங்களில் புதிய மாணவர்களைப் பதிவு செய்வதற்கான திகதி இன்று வரை நீடிக்கப்பட்டுள்ளது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணையம் தெரிவித்துள்ளது.
அது தொடர்பான அறிவித்தலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# சமூக ஊடகரை பதிவது ஆபத்தான சூதாட்டமே

## சஜித் தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.22
சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் நபர்களை ஊடகம் மற்றும் தகவல் அமைச்சின் கீழ் பதிவு செய்வது நாட்டு மக்களின் தனிப்பட்ட உரிமையுடன் மேற்கொள்ளும் ஆபத்தான சூதாட்டம் என ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அமைப்பின் பிரசாரச் செயலாளர் ரசிக ஜயகொடி தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஒரு சமூக ஊடக கணக்கைப் பயன்படுத்தும் எவரும் தமது சமூக ஊடகக் கணக்கை ஆரம்பிக்கும்போது தரவின் பாதுகாப்புக் குறித்து சம்பந்தப்பட்ட சமூக ஊடக நிறுவனத்துடன் ஒரு உடன்பாட்டைச் செய்து கொள்வார்கள். அதனடிப்படையில் அந்த நிறுவனங்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோரின் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தவிர ஏனைய செயற்பாடுகள் சம்பந்தமான விடயங்களில் அவர்களின் தரவு மற்றும் தகவல்களின் தனிப்பட்ட உரிமையைப் பாதுகாக்கும். ஒரு நபர் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி ஒரு தவறான செயலைச் செய்யும்போது அந்த நிறுவனங்களைத் தொடர்புகொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் அரசாங்கத்துக்கு முடியும். எனவே சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவோரை பதிவு செய்வது நரித்தனமான நோக்கத்துடன் மேற்கொள்ளும் ஆபத்தான சூதாட்டத்தைத் தவிர வேறு எதுவுமில்லை - என்றார். (ப)



# பாடசாலைக்கு அருகில் தொடரும் கிரவல் அகழ்வு

## தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

வவுனியா,டிசெ.22
சேமமடு பாடசாலைக்கு அருகில் கிரவல் அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பாடசாலையை சூழவுள்ள பகுதிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றன. இதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் தம்பாப்பிள்ளை சிவராசா கோரிக்கை விடுத்துள்ளார் .
சேமமடு சண்முகானந்தா வித்தியாலயத்துக்கு அருகே சுமார் 75 மீற்றர் தூரத்தில், தனியார் ஒருவருக்குச் சொந்தமான மேட்டுக் காணியிலிருந்து கனரக வாகனங்கள் ஊடாக தினமும் கிரவல் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பாடசாலையில் கற்றல் நடவடிக்கைகள் உட்பட மாணவர்கள் பயன்படுத்தும் வீதிகளும் சேதமடைந்துள்ளன.
தினமும் 30 தொடக்கம் 40 வரையான டிப்பர் வாகனத்தில் யாழ்ப்பாணம் உட்பட பல்வேறு மாவட்டங்களுக்கு கிரவல் கொண்டு செல்லப்படுகின்றது. இதனைத்தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கையை வன்னியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (க-110)

*யாழ்ப்பாண மாவட்டத்தில்*

# 2,400 குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள்

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.22
யாழ்ப்பாண மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட 2 ஆயிரத்து400 குடும்பங்களுக்கு நிவாரண உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
யாழ்ப்பாண மாவட்டத்தில் தனிமைப்படுத்தலில் உள்ளோருக்கு அரசால் வழங்கப்படும் கொரோனா இடர் நிவாரண உதவியின் கீழ் 26 மில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் 2ஆயிரத்து 400 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
இரண்டு கட்டங்களாக ஒரு குடும்பத்துக்கு பத்தாயிரம் ரூபா உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. தற்போது 1ஆயிரத்து670 குடும்பங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் தனிமைப்படுத்தலில் உள்ளனர். - என்றார். (ஜ-20)



நாவற்குழி சித்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை கஜமுகா சூரன் போர் சிறப்பாக நடைபெற்றது. (ஜ-159)

# அலியான்ஸ் வருடாந்த வி




அலியான்ஸ் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் வருடாந்த விருது வழங்கல் விழாவானது முதன்முறையாக மெய்நிகர் ரீதியிலே எமது விற்பனை ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சியை பாராட்டும் வண்ணம் 2020 டிசம்பர் மாதம் 18ம் திகதி அன்று இனிதே நடைபெற்றது.

எமது குழு உறுப்பினர்கள் சர்வதேச ரீதியிலான கோவிட் பரவலின் போதும் அனைத்து துன்பங்களையும் பொருட்படுத்தாது இதுவரை கண்டிராத சவால்களையும் கடந்து மிகத்திறமையான சேவையை எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கினார்கள்.

இதிலே தனது மிகத்திறமையான சேவையை வழங்கிய 93 நட்சத்திர திறமையாளர்களை அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா மற்றும் அலியான்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா நிறுவனங்களிலிருந்து இந்த மெய்நிகர் விழாவினூடாக அடையாளங்கண்டத்தில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இந்நிகழ்ச்சியில் அலியான்ஸ் ஆசிய பசுபிக் வலைய தலைமை நிர்வாக அதிகாரியான திருமதி. கிலேடியா சேலம் மற்றும் அலியான்ஸ் லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவர் திரு. அல்ப் அல்டன் அவர்களும் சிங்கப்பூரிலிருந்து பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது. இவ்விழாவினூடாக தற்போதய சூழ்நிலையிலும் தமது சகஊழியர்களின் வெற்றி கௌரவிக்கபடுவதை அணைத்து ஊழியர்களும் மெய்நிகராக கண்டுகளித்து புதிய அனுபவத்தை ஏற்படுத்தியிருந்தது.

## CHAMPION OF CHAMPIONS




ரியான்சி டிக்மன்
சிட்டி 01 கிளை
அலியான்ஸ் இன்சுரன்ஸ்

வாசுகி மோகனரூபன்
திருநெல்வேலி கிளை
அலியான்ஸ் லைப் இன்சுரன்ஸ்



S V K சபாநாயக்க
வெற்றியாளர் பிரிவின் தலைவர்-தரம் 01
ப்ளெடினம் தரப்படுத்தல்
களுபோவில கிளை



B M லசந்த பர்னாந்து
வெற்றியாளர் பிரிவின் தலைவர்-தரம் 03
ப்ளெடினம் தரப்படுத்தல்
சிட்டி கிளை



S A குணவர்தன
வெற்றியாளர் டீயஉெ யளளரசயஉெந
பிரிவின் தலைவர்



MDRT

V மோகனரூபன்
வெற்றியாளர் - MDRT
ப்ளெடினம் தரப்படுத்தல்
திருநெல்வேலி கிளை

நிறுவன மேலாண்மையானது விற்பனை குழுவிலுள்ள வெற்றியாளர் அனைவருக்கும் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொ
குழுவின் வெற்றிக்கு முக்கிய காரணமாக உள்ள எமது வாடிக்கையாளர்களுக்கும் அவர்கள் எம்மீது வைத்திருக்கும் நமபிக்

# விருது வழங்கல் விழா - 2020




## அலியான்ஸ் இன்சுரன்ஸ் லங்கா லிமிடட்



**W D A C D ஜயதுங்க**
வெற்றியாள் பிரிவின் தலைவர்-தரம் 01
வைர தரப்படுத்தல்
கொழும்பு இன்டெர்க்ராட்ட் கிளை



**P D N சந்ரரத்ன**
வெற்றியாளர் பிரிவின் தலைவர்-தரம் 01
தங்க தரப்படுத்தல
மஹரகம கிளை



**H துலான் அவிஸ்க சில்வா**
வெற்றியாளர் பிரிவின் தலைவர்-தரம் 02
ப்ளெடினம் தரப்படுத்தல்
களுதர கிளை



**C W M N I சந்ரசேகர**
வெற்றியாளர் பிரிவின் தலைவர்-தரம் 02
வைர தரப்படுத்தல்
கொழும்பு இன்டெர்க்ராட்ட் கிளை



**W S J எதிரிசிங்க**
வெற்றியாளர் பிரிவின் தலைவர்-தரம் 02
தங்க தரப்படுத்தல
மெட்ரோ 01 கிளை



**W A S சரண்ஜய**
வெற்றியாளர் பிரிவின் தலைவர்-தரம் 03
வைர தரப்படுத்தல்
கொழும்பு மெட்ரோ கிளை



**W P S D விக்ரமசிங்க**
வெற்றியாளர் பிரிவின் தலைவர்-தரம் 03
தங்க தரப்படுத்தல
வெள்ளவத்த கிளை



**T L J நீல்சன்**
வெற்றியாளர் பிரிவின் தலைவர்-தரம் 04
ப்ளெடினம் தரப்படுத்தல்
கொழும்பு சென்ட்ரல் கிளை



**K D M திசாநாயக்க**
வெற்றியாளர் பிரிவின் தலைவர்-தரம் 04
வைர தரப்படுத்தல்
கொழும்பு மெட்ரோ கிளை



**B N D மார்டினஸ்**
வெற்றியாளர் பிரிவின் தலைவர்-தரம் 04
தங்க தரப்படுத்தல
பாணந்துற கிளை



**W T N சம்பத்**
வெற்றியாளர் அணித்தலைவர்
ப்ளெடினம் தரப்படுத்தல்
கொழும்பு சென்ட்ரல் கிளை



**G U I கின்தொட**
வெற்றியாளர் அணித்தலைவர்
வைர தரப்படுத்தல்
கொழும்பு இன்டெர்க்ராட்ட் கிளை



**J R ஜயரட்னராஜா**
வெற்றியாளர் அணித்தலைவர்
தங்க தரப்படுத்தல
பெட்டா கார்பொரேட் கிளை



**சதுர ருவங்கல**
வெற்றியாளர் சிறந்த பிராந்திய விற்பனை
முகாமையாளர்
அவிசவெள்ள பிராந்தியம்



**M I ஆப்தீன்**
வெற்றியாளர் சிறந்த கிளை தலைவர்
ப்ளெடினம் தரப்படுத்தல்
சிட்டி 01 கிளை

## அலியான்ஸ் லைப் இன்சுரன்ஸ் லங்கா லிமிடட்



**S செந்தூரன்**
வெற்றியாளர் - MDRT
ப்ளெடினம் தரப்படுத்தல்
கிளிநொச்சி கிளை



**S பார்த்தீபன்**
ப்ளெடினம் தரப்படுத்தல் / MDRT
திருநெல்வேலி கிளை



**S I பர்னாந்து**
ப்ளெடினம் தரப்படுத்தல் / MDRT
வென்னப்புவ கிளை



**A ஜெயரூபி**
ப்ளெடினம் தரப்படுத்தல் / MDRT
திருநெல்வேலி கிளை

**Y திலீபன்**
ப்ளெடினம் தரப்படுத்தல் / MDRT
சுன்னாகம் கிளை

**R லக்சனா**
ப்ளெடினம் தரப்படுத்தல் / MDRT
பண்டாரவெல கிளை

கொள்வதோடு எம் நிறுவனத்தின் மற்றும் எமது விற்பனை-
பிக்கைக்கும் நன்றிகளை தெரிவிக்கின்றது.

Allianz

# தனிச் சிங்கள - பௌத்த கொள்கை ஊடாக ஆட்சியைப் பிடிக்க முயற்சி

## முன்னாள் அமைச்சர் மங்கள சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.22
எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சிலரும் தனிச் சிங்கள பௌத்த கொள்கைகளின் ஊடாக ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை உருவாகியுள்ளது. இலங்கை வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்குப் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கு நிலைமை நாட்டில் பாதிக்கப்பட்டுள்ளது. லிபரல் ஜனநாயகக் கொள்கைகள் மெய்யான பௌத்த மதக் கொள்கைகளில் காணப்படுகின்றன. பௌத்த மதக் கொள்கை என்றவுடன் மதுபானக் கடைகளை மூடி அரேபிய நாடுகள் போன்று கடுமையான சட்டங்களை அமுல்படுத்துவதை நாம் கூறவில்லை.



ஐக்கிய தேசியக் கட்சி இந்த நாட்டுக்குத் தேவை. எனவே பூச்சியத்திலிருந்து கட்சியை ஆரம்பிக்க வேண்டும் - என்றார். (ப)

# கால அவகாசம் வழங்கி அரசை காப்பாற்றாதீர்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் உருக்கம்




யாழ்ப்பாணம், டிசெ. 22
**நல்லாட்சி அரசாங்கத்தில் எமக்கு செய்த துரோகத்தைப் போல் இனியும் கால அவகாசம் வழங்கி அரசாங்கத்தை காப்பாற்ற நினைக்க வேண்டாம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினர் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு வலியுறுத்தினர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதத்தில் இடம்பெறும் அமர்வில் இலங்கை அரசாங்கத்துக்கு மீண்டும் கால அவகாசம் கோரும் பிரேரணை ஒன்றை சமர்ப்பிப்பதற்காக எமக்காகப் போராடும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர் என அறிகிறோம். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நீதியைப் பெற்றுக்கொடுக்க பல வழிகள் கிடைத்த போதும் அதனைத் தவறவிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் பல சலுகைகளைப் பெற்றிருந்தார்கள்.
2017ஆம் ஆண்டு ஐ.நா அமர்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுத் தருமாறு ஜெனிவா சென்று மனுக் கையளித்தோம். தற்போதைய அரசாங்கத்தை சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் எமக்கு சாதகமான ஒரு தீர்மானம் எதிர்வரும் மார்ச் மாத அமர்வில் வரக்கூடும் என்ற நம்பிக்கையும் எமக்கு இருக்கிறது.
ஐ.நா.வில் கால அவகாசத்தை வழங்க முற் படுவோர் தெருத் தெருவாக உறவுகளுக்காகப் போராடும் எம்மோடு கலந்துரையாடாவிட்டாலும் எமக்காகப் போராடுபவர்களுடன் கலந்துரையாடி முடிவுகளை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-20)



முகமாலை கிராம சக்தி அமைப்பினரால் வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் முகமாலையைச் சேர்ந்த 5 குடும்பங்களுக்கு ஆடும் இரண்டு குடும்பங்களுக்கு கோழியும் வழங்கப்பட்டன. பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளரால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ச-6)

# தொல்லியல் பயிற்சி; பாடசாலை கையளிப்பு

கொழும்பு, டிசெ. 22
பேராசிரியர் சேனக பண்டாரநாயக்க தொல்லியல் பயிற்சிப் பாடசாலை கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.
மத்திய கலாசார நிதியத்தால் சிகிரிய தொல்பொருள் வளாகத்தில் இந்தப் பாடசாலை நிர்மாணிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் அது மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.
50 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அந்தப் பயிற்சி பாடசாலையின் ஊடாக புதிய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுக்கான குடியிருப்பு வசதிகளுடன் நடைமுறை மற்றும் கோட்பாட்டு ரீதியிலான ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஒழுக்கமான தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த தொல்லியல் பயிற்சி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# கொரோனாத் தொற்றாளர்களுக்கு முறையாக உணவு வழங்கவில்லை

## உறவினர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.22
சாலாவ அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் கொரோனா நோயாளர்களுக்கு முறையாக உணவு வழங்கப்படவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.
சாலாவ அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் கொரோனா நோயாளர்கள் 40 பேருக்கு உணவு வழங்கும் பொறுப்பை ஏற்றவர்களால் 3 நாள்களாக உரிய முறையில் உணவு வழங்கப்படவில்லை என நோயாளிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.
இந்த மருத்துவமனையில் உணவு வழங்குவதற்காக உணவு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனத்துக்கு பணம் தாமதமாக கிடைத்துள்ளதால் 17, 18 மற்றும் 19ஆம் திகதிகளில் நோயாளிகளுக்கு காலை உணவு வழங்கப்படவில்லை என அவர்களது உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
இந்த நிலையில் மருத்துவமனையின் பிரதான மருத்துவர் ஹங்வெல்ல, சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் நோயாளிகளுக்கு இலவசமாக உணவு வழங்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)



பிள்ளையார் கதையின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் வவுனியா ஆதிவிநாயகர் ஆலயத்தில் கஜமுகா சூரன் போர் இடம்பெற்றது. (ப-402)

# மாவீரர்களின் தந்தைக்கு சைக்கிள் கையளிப்பு

ஊர்காவற்றுறை,டிசெ.22
ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை பகுதியில் வாழ்கின்ற இரண்டு மாவீரர்களின் தந்தை ஒருவருக்கு வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலன் ஊடாக சைக்கிள் வழங்கப்பட்டது.
முன்னாள் போராளியும் , தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்றுறை மூலக்கிளை செயலாளருமாகிய மடுத்தீன் பெனடிக்ற்னின் வேண்டுகோளுக்கிணங்க இச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# கௌரவிப்பு நிகழ்வு

கொடிகாமம், டிசெ.22
சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையினால், மத்தியஸ்தர் சபையில் சேவையாற்றி அகில இலங்கை சமாதான நீதிவானாகப் பதவியேற்ற சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை தவிசாளர் வை.இராசரத்தினம் தலைமையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெற்றது.
கடந்த 10 வருடங்களுக்கு மேலாக சேவை புரிந்த செ.பேரின்பநாதன், த.சுபத்திராதேவி, வ.உதயரஞ்சினி, செ.மகேஸ்வரன், த.அப்புத்துரை த.தர்மகுலசிங்கம், சி.சரோஜினிதேவி ஆகியோர் அகில இலங்கை சமாதான நீதிவானாகப் பதவியேற்றதை முன்னிட்டு சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையால் கௌரவிக்கப்பட்டனர். (ப-159)

# தடுப்பூசி பாவனையால் மாத்திரம் கொரோனாவைத் தடுக்க முடியாது

## விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும் என்கிறது உலக சுகாதார அமைப்பு

**கொழும்பு, டிசெ.22**
**கொவிட் தொற்றுநோயைத் தவிர்க்க சுகாதார நெறிமுறைகளை தடுப்பூசியுடன் நீண்ட காலம் பின்பற்ற வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

மேலும், உலகம் முழுவதும் கொவிட் தொற்றுநோயால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அனைத்து மக்களும் கொரோனா தடுப்பூசிக்காக காத்திருக்கின்றனர். ரஷ்யா, பிரிட்டன் மற்றும் அமெரிக்காவிலும் தடுப்பூசி பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்த தடுப்பூசி கொரோனாத் தொற்றுநோய்க்கு எதிரான பிரம்மாஸ்திரம் அல்ல. தடுப்பூசியுடன் சுகாதார நடைமுறைகளை நீண்டகாலம் பின்பற்ற வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த ஒரு வருடமாக இரவும் பகலும் உழைத்து வரும் சுகாதார ஊழியர்களைப் பற்றி சிந்திப்பதுடன், கொவிட் சுகாதார நெறிமுறையான தனிநபர் இடைவெளி, அடிக்கடி கை கழுவுதல், முகமூடி அணிவது, நெரிசலான இடங்களுக்கு செல்வதைத் தவிர்ப்பது போன்றவற்றை கடைப்பிடியுங்கள் எனவும் உலக சுகாதார அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பின் பிராந்திய இயக்குநர் தகேஷி கசாய் தெரிவிக்கையில், எந்த நிலையிலும் கொரோனா வைரஸ் உங்களைச் சுற்றி எப்படியாவது வருகிறது.

நாம் அனைவரும் ஆபத்தில் இருக்கிறோம். எந்தவொரு ஆபத்தான சூழ்நிலையையும் எதிர்கொள்ள நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.

தொற்றுநோய் குறித்த கவலைகள் மற்றும் நிச்சயமற்ற நிலைகள் இருந்த போதிலும், தங்களுக்கும் தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் தொற்றுநோயைத் தடுக்க தங்களால் முடிந்த அனைத்தையும் இளைஞர்கள் சமூக அக்கறையுடன் மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)

## பண்டிகையில் சுற்றுலாவுக்கு கட்டுப்பாடு!

கொழும்பு, டிசெ.22
பண்டிகைக் காலத்தில் நுவரெலியாவுக்குச் சுற்றுலா செல்ல எதிர்பார்த்துள்ளவர்களுக்கு புதிய அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் தாம் கொரோனா அவதானமிக்க பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

இதற்காக அவர்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் சான்றிதழ் ஒன்றைப் பெறுவது கட்டாயம் என்றும் அவர்கள் தங்கும் இடங்களில் சான்றிதழைக் கையளிக்க வேண்டும் என்றும் நுவரெலியா மாவட்டச் செயலாளர் அறிவித்துள்ளார். (ற-இ)



## விதிமுறை மீறல்: 1652 பேர் இதுவரை கைது

கொழும்பு, டிசெ. 22
கொரோனாவின் மூன்றாவது அலைப் பரவல் ஆரம்பமாகியதையடுத்து கடந்த ஒக்ரோபர் 30ஆம் திகதியிலிருந்து முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் இதுவரை ஆயிரத்து 652 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ-இ)

## தமிழகத்துக்குள் நுழைந்த இலங்கையர் கைது

கொழும்பு, டிசெ.22
சட்டவிரோதமாக கடல் வழியாக தமிழகத்துக்குள் நுழைந்த இலங்கையர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாட்டில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரின்போது தமிழகத்துக்கு அகதியாகச் சென்று மண்டபம் அகதிகள் முகாமில் தங்கி இருந்த முஜிபூர் ரகுமான் என்பவர், கடந்த 2019 டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி சட்டவிரோதமாக இலங்கைக்கு திரும்பியுள்ளார்.

இந் நபர் மீண்டும் நேற்றிரவு மன்னார் பேசாலையிலிருந்து சட்டவிரோதமாக தமிழகத்தின் தனுஷ்கோடிக்கு சென்றுள்ளார். இவரைக் கைது செய்த இந்திய உளவுத்துறை அதிகாரிகள், அவரை மண்டபம் முகாமில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ந-இ)

## கொரோனா உயிரிழப்பு ஜனவரியில் அதிகரிக்கும்

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, டிசெ. 22
நாட்டில் கொரோனா வைரஸால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை ஜனவரி மாதத்தில் அதிகரிக்கும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் எனவும், முதியோர் இல்லங்களில் வைரஸ் பரவுவதைத் தடுக்க அவற்றை உரியமுறையில் நிர்வகிக்க வேண்டும் எனவும் அந்தச் சங்கத்தின் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார். (வ-இ)

## மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.22
தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மழையுடனான காலநிலையால் 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கே இந்த மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச)

## மத விழுமியங்களைக் கொண்ட சமூகம்தான் எமக்குத் தேவை

*பிரதமர் மஹிந்த தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 22
இலங்கைக்கு மதசார்பற்ற சமூகம் அவசியமில்லை மாறாக மதவிழுமியங்களை அடிப்படையாகக் கொண்டுவாழும் சமூகமே தேவை என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மதவிழுமியங்களை வளர்த்தெடுப்பதும் மதங்களுடன் தொடர்புடைய இடங்களை அபிவிருத்தி செய்வதுமே எங்கள் கடமையும் பொறுப்புமாகும்.

அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் இதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறமாட்டோம். மிகவும் நெருக்கடியான தருணத்திலும் கத்தோலிக்க சமூகம் அன்பின் செய்தியை பாதுகாக்கின்றது.



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் கத்தோலிக்க சமூகம் நிலைமையை மேலும் சிக்கலானதாக மாற்றாமல் பொறுமையைக் கடைப்பிடித்தது - என்றார். (ம)

பண்டிகை காலத்தில்

## மதுபானசாலைகளை மூடுமாறு கோரிக்கை

கொழும்பு, டிசெ.22
நத்தார் மற்றும் புதுவருட பண்டிகைக் காலத்தில் சகல மதுபானசாலைகளையும் மூடுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளதாவது,

மது அருந்திவிட்டு பொறுப்பற்ற விதத்தில் ஆங்காங்கே சுற்றித்திரியும் நபர்களாலும் கொரோனா பரவும் அபாயம் உள்ளதால் பண்டிகைக் காலங்களில் நாட்டிலுள்ள சகல மதுபானசாலைகளையும் வேண்டும்.

கொழும்பு மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 65 தொடக்கம் 70 சதவீதமாகக் காணப்படும் அதேவேளை, மதுபானசாலைகளை தொடர்ச்சியாக திறந்து வைப்பதால், 2021ஆம் ஆண்டு, தொற்றாளர்களின் எண்ணிக்கை 80 சதவீதமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (வ-இ)



# உங்கள் ராசிக்கு எப்படி?

## ஆங்கிலப் புத்தாண்டு பலன்கள்




இன்னும் சிறிது நாள்களில் கடக்க இருக்கும் 2020 ஆம் ஆண்டின் முடிவுக்காக எம்மில் பலரும் ஆர்வமாகக் காத்துக் கொண்டிருக்கிறோம். இந்த வருடம் போல் எப்போதும் உலக மக்கள் துயரத்தைச் சந்தித்திருக்கமாட்டார்கள். 2020ஆம் ஆண்டைக் கடக்க இருக்கும் நிலையில், வர இருக்கும் புதிய 2021 ஆம் ஆண்டைப் பற்றிய பயமும் தொற்றிக் கொண்டுள்ளது. இந்த ஆண்டாவது உலக மக்களுக்கு சுபீட்சத்தைத் தருமா? என்கிற எதிர்பார்ப்பு ஒவ்வொருவருக்கும் அதிகமாகவே இருக்கிறது என்று கூறலாம். அவ்வகையில் வர இருக்கும் 2021ஆம் ஆண்டுக்கான பலன்கள் இங்கு தரப்படுகின்றன.

சிம்ம ராசி அன்பர்களே!

உங்கள் ராசிப்படி 2021இல் சனி பகவான் ஆறாம் வீட்டிலும், செவ்வாய் பகவான் ஒன்பதாம் வீட்டிலும், குரு பகவான் ஏழாவது வீட்டிலும் இடம் பெயருவார்கள். நிழல் கிரங்களான ராகு மற்றும் கேது முறையே 6 மற்றும் 4 ஆகிய இடங்களுக்கு பெயர்ச்சி அடைவார்கள்.

இது போன்ற கிரக அமைப்பில் உங்களுடைய வாழ்க்கைத் துணையாக இருக்கும் நபர்களுடன் நல்ல புரிதல் உண்டாகும். குடும்பத்தைப் பொறுத்தவரை சிம்ம ராசிக்காரர்களுக்கு குரு பெயர்ச்சிக்கு பிறகு சிறப்பான முன்னேற்றம் உண்டாகும். அதுவரை சண்டை, சச்சரவுகளோடு இருந்தாலும் குரு பெயர்ச்சிக்கு பிறகு நிம்மதியான சூழல் உண்டாகும். உற்றார், உறவினர்களுடன் இணக்கமாக செல்வது நல்லது. அவர்களுடன் தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்பட்டால் குடும்பத்தில் நிறைய குழப்பங்கள் உண்டாகும். உங்களுடைய அன்பான குடும்பத்துக்காக சிறிது நேரத்தை கூடுதலாக செலவிடுவதில் கவனம் செலுத்துவது நல்லது. கணவன் மனைவி இடையான நெருக்கத்தை அதிரிக்க முயற்சிகள் மேற்கொள்ளுங்கள். உங்களுக்குள் இருக்கும் இடைவெளி மன அமைதியைக் கெடுக்கலாம்.

**வியாபாரம் மற்றும் தொழில்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் ராகுவின் பார்வையால் உங்களுடைய எதிரிகள் மீது நீங்கள் ஆதிக்கம் செலுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளது. உங்களுடைய நயமான பேச்சினால் மற்றவர்களை எளிதாக ஈர்த்து விடுவீர்கள். உங்களுடைய முன்னேற்றத்தை பார்த்து எதிரிகள் பொறாமைப்படுவதற்கு வாய்ப்புகள் உண்டாகும். இதனால் தேவையில்லாத புதிய பிரச்சினைகளும் உருவாக வாய்ப்புகள் உண்டு என்பதால் எச்சரிக்கை தேவை. செவ்வாய் பகவான் 9ஆம் வீட்டில் அமர்ந்திருப்பதால் உங்களுடைய பணிகளில் சிறப்பான ஒரு முன்னேற்றம் இருக்கும். எதிர்வரும் சவால்களைக் கூட திறமையாக கையாளுவீர்கள். ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் செவ்வாயின் இட மாற்றத்தினால் சில இடையூறுகள் ஏற்பட்டு மறையக் கூடிய வாய்ப்புகளும் உண்டு.

**உத்தியோகம்:** உத்தியோகத்தை பொறுத்தவரை சிம்ம ராசிக்காரர்கள் நிறைய அலைச்சல்களை சந்திப்பீர்கள். ஆண்டின் தொடக்கத்தில் சனி மற்றும் குரு பகவான் சேர்ந்து இருப்பதால் நிறைய பிரச்சி. னைகளை கொடுப்பார்கள். கிரகப் பெயர்ச்சிக்கு பின்பு செப்ரெம்பர் மாதம் வரை சுமாரான பலன்கள் இருக்கும். ஆண்டின் இறுதியில் நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றங்கள் நல்ல படியாக நடக்கும். உங்களுடைய புதிய முயற்சிகளுக்கு ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய அங்கீகாரங்கள் கிடைக்கும்.

**பொருளாதாரம்:** பொருளாதாரத்தில் சிம்ம ராசிக்காரர்களுக்கு ஏற்ற, இறக்கங்களுடன் பலன்களும் இருக்கும். பணவரவு சிறப்பாக இருந்தாலும் செலவினங்களும் அதிகரிக்கும் வாய்ப்புகள் உண்டு. உங்களுடைய வருமானத்தை அதிகரிக்க என்ன செய்யலாம்? என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டிய நேரமாக இருக்கும். ஆண்டின் தொடக்கத்தில் சிறப்பாக இருந்தாலும், ஏப்ரல் மாதம் கூடுதல் பலன்கள் உண்டாகும். பணம் பல வழிகளில் வந்தாலும், அதனை சரியான முறையில் பயன்படுத்தினால் முன்னேற்றம் நிச்சயம்.

**பெண்களுக்கு:** பெண்களைப் பொறுத்தவரை சிம்ம ராசிக்காரர்களுக்கு நினைத்தது நடப்பதில் இடையூறுகள் ஏற்படலாம். ஒருவிதமான பதற்றத்துடன் ஆண்டின் தொடக்கத்தில் இருந்தாலும், ஏப்ரல் மாதத்துக்கு பிறகு நல்லதொரு மாற்றம் உண்டாகும். உடல் நிலையில் கவனம் செலுத்துவது மிகவும் நல்லது. சத்தான உணவு பழக்கத்தால் மருத்துவ ரீதியான வீண் விரயங்களைத் தவிர்க்கலாம்.

ஆடம்பர செலவுகளை குறைத்துக் கொள்வதன் மூலம் நிறைய பிரச்சனைகளை சமாளிக்கலாம். இறை வழிபாட்டில் கவனம் செலுத்தினால் மன அமைதி கிடைக்கும்.

**பரிகாரம்: சனிக் கிழமைகளில் பெருமாள் வழிபாடு செய்து வர நல்ல முன்னேற்றம் உண்டாகும். உங்களால் முடிந்தவர்களுக்கு அன்னதானம் செய்து வர நல்லதெல்லாம் நடக்கும்.**



## வட்ஸப்பில் போலித் தகவல் பரிமாற்றிய ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ.22

இலங்கையில் சில தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளது என்று வட்ஸப் ஊடாக போலித் தகவலைப் பரிமாற்றிய ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரி வித்துள்ளார்.

தனியார் நிறுவனமொன்றில் கணக்காய்வாளராக கடமையாற்றும் 31 வயதுடைய வெலிகம்பிட்டிய பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கந்தானை பிரதேசத்தில் வைத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர், கந்தானை பிரதேசத்திலுள்ள பலருக்கு ஆங்கிலத்தில் அந்தத் தகவலைப் பகிர்ந்துள்ளார் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ற-இ)



சமாதானமும் சமூகப்பணியும் நிறுவனத்தின் நிதி உதவியில் நிந்தவூர் அல் மினா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு நேற்று கொரோனா நோய்த்தடுப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ற-இ)

## பேக்கரி ஊழியர்கள் 23 பேருக்கு தொற்று

கொழும்பு, டிசெ.22

இரத்மலானை பகுதியில் அமைந்துள்ள பேக்கரி ஒன்றில் பணியாற்றும் 23 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அங்கு பணியாற்றும் சகலரையும் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

## மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் கைது!!

கொழும்பு, டிசெ.22

இலங்கை கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட ஒரு இந் திய மீன்பிடிப் படகுடன் 4 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். இலங்கை கடற்படை வடக்கு கடலில் மேற்கொண்ட சிறப்பு தேடுதலின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவர்கள் குறித்த மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்றன.

கொவிட் 19 தொற்றுநோயால் இந்த சிறப்புத் தேடுதல் குறைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த வாரம் முதல் கடற்படை மீண்டும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

இதில் கடந்த 15 ஆம் திகதி ஐந்து இந்திய மீன்பிடிப் படகுகளுடன், 36 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர். (ற-இ)

# மாலைதீவில் ஜனாஸா அடக்கம்; அரசின் முயற்சி தோல்வியில்

கொழும்பு, டிசெ.22
கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை மாலைதீவில் அடக்கம் செய்யும் அரசாங்கத்தின் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது என "சண்டே ரைம்ஸ்" தெரிவித்துள்ளது மேலும் தெரிவித்துள்ளதாவது.



ஜனாஸாக்களை மாலைதீவில் அடக்கம் செய்யும் அரசாங்கத்தின் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது. இரு நாடுகளும் எக் காரணங்களையும் தெரிவிக்காமல் இந்தத் திட்டத்தை கைவிட்டுள்ளன. உடல்களை மாலைதீவில் அடக்கம் செய்யும் நடவடிக்கையால் பல அரசியல் சர்வதேச விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை இருநாடுகளும் உணர்ந்திருக்கலாம்.

இதற்கு அப்பால் மாலைதீவில் இதற்கு எதிர்ப்பு அதிகமாகக் காணப்பட்டது. இலங்கை அரசின் வேண்டுகோளால் ஏற்படக்கூடிய பல விளைவுகள் குறித்து ஆராய்ந்துள்ளோம் என மாலைதீவின் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மாலைதீவு இன்னொரு நாட்டின் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களை புதைப்பதற்கான இடுகாடு என அடையாளம் காணப்பட்டால் நாட்டின் சுற்றுலாத்துறைக்கு பாதிப்பு ஏற்படலாம் என அந்த நாட்டின் சுற்றுலாத்துறையினர் அச்சம் வெளியிட்டுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன என்றுள்ளது. (ந-இ)

## மண்வாசனை அமைப்பால் 2ஆம் கட்டமாக உலருணவு

மன்னார், டிசெ.22
மண் வாசனை அமைப்பின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் 2 ஆம் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப் பட்டன.

அதிக பாதிப்புகளுக்கு உள்ளான 71 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு முதல் கட்டமாக கடந்த சனிக்கிழமை 30 குடும்பங்களுக்கு ஆயிரத்து 974 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேலும் 25 குடும்பங்களுக்கு ஆயிரத்து 974 ரூபா பெறு மதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. மண் வாசனை அமைப்பின் ஊடாக மன்னார் மாவட்ட இணைப்பாளர் அந்தோனி சகாயத்தால் இந்த உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-56)






## சாதாரண தர மாணவர்களுக்கு கணிதப் பயிற்சிப் புத்தகங்கள்

மன்னார், டிசெ. 22
மன்னார் அல் அஸ்ஹார் தேசிய பாடசாலையில் இவ் வருடம் க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் களுக்கு கணித பாட மாதிரி வினாத்தாள்கள் அடங்கிய பயிற்சி புத்தகங்கள் கடந்த சனிக்கிழமை மன்னார் அயனிஸ்கா மாணவர் தொண்டு நிறுவனத்தால் கையளிக்கப் பட்டன.

பாடசாலையின் அதிபர் எம்.வை.மாஹிர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் அயனிஸ்கா மாணவர் தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் யதீஸ் 35 மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்கினார். (ச-56)

## மானிப்பாய், பண்டத்தரிப்பு சந்தைகளில் தொற்றுநீக்கமும் பி.சி.ஆர் சோதனையும்

வலிகாமம், டிசெ.22
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் சண்டிலிப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களின் தலைமையில் வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்துக்குட் பட்ட மானிப்பாய் மற்றும் பண்டத்தரிப்பு பொதுச்சந்தைகள் கடந்த வெள்ளிக்கிழமை தொற்றுநீக்கம் செய்யப்பட்டதுடன் அப்பகுதி வர்த்தகர்களுக்கும் அவர் களுடன் நெருக்கமான 250 பேருக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தெரிவிக்கையில்,



பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் அனைவரதும் பரிசோதனை முடிவுகள் கிடைக்கப் பெறும் வரை இச் சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களின் வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கும். முடிவுகள் வெளியாகும் வரை பரிசோதனை மாதிரிகள் பெறப்பட்டவர்கள் வேறு இடங்களில் தனிப்பட்ட ரீதியில் வர்த்தக நடவடிக்கைகளிலோ சமூகத் தொடர்பாடல்களிலோ ஈடுபட வேண்டாம் எனவும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தம் உயிர்களை பணயம் வைத்து செயற்படும் வைத்தியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், துறை சார் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தன்னலமற்ற செயற்பாட்டுக்கு அனைவரும் ஒன்று திரண்டு ஒத்துழைத்து நோய்த் தொற்றிலிருந்து எமது பிரதேசத்தையும் மக்களையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்- என்றார். (ந-115)



## இன்றைய நாள்

**மேடம்:** பழைய கடன்கள் வசூலாவது பற்றிய மனஅழுத்தம் குறையும். என்றோ கடுமையாக உழைத்ததன் பலனை இன்று நீங்கள் பெறுவீர்கள். கணவருக்கு உதவிகள் செய்து நீங்கள் பாராட்டு பெறும் நாள்.

**இடபம்:** கடன் பிரச்னை குறையத் தொடங்கும். நல்ல திருப்பம் வரும். அலுவலகத்தில் மேலதிகாரிகள் உங்களிடம் அன்பாக நடந்து கொள்வார்கள். உங்களது துறையில் ஓரளவு வளர்ச்சியைக் காண்பீர்கள்.

**மிதுனம்:** வேலைப்பளு அதிகமானாலும் அதற்கேற்ற பலனும் உண்டு. கடுமையாக முயற்சி செய்ததன் பேரில் லாபம் ஈட்டுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கடகம்:** கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலுமா என்ற பயம் ஏற்படும். தன லாபம் வருவதில் சிறு சிறு தடைகளைச் சந்திக்க நேரிடலாம் பணியாளர்களுக்கு பதவி, ஊதிய உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது.

**சிம்மம்:** மாறுபட்ட நாள். உங்களுக்கு கீழே பணிபுரிபவர்கள் மதிப்பார்கள். அலுவ லகத்தில் இழந்த உரிமைகள் மீளும். தொழிலில் சிறு மாற்றம் உண்டாகும். மனக்கலக்கங்கள் தீரும்.

**கன்னி:** வரவுக்குமேல் செலவு ஏற்படும் நாள். மனக்குழப்பம் அதிகரிக்கும். திட்டமிட்ட வளர்ச்சி காண்பர். சூழ்நிலைகளை நன்றாக பயன்படுத்தி வெற்றி பெறுவீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.

**துலாம்:** திட்டங்கள் வெற்றி பெறும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். கனவு நனவாகும் நாள். ஏற்ற, இறக்கமான சூழ்நிலைகள் மாறும்.

**விருச்சிகம்:** இனிய அனுபவங்கள் கிடைக்கும். சகோதரருக்கு உதவுவீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களைக் கண்டறிந்து கொள்வீர்கள். பழைய கடனை அடைப்பீர்கள்.

**தனுசு:** பணியாளர்கள் புதிய முயற்சிகளில் எளிதாக வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த முன்னேற்றம் இருப்பினும் உழைப்பு கடுமையாக இருக்கும்.

**மகரம்:** குடும்பத்தில் ஒருவருக்குத் திருமண முயற்சி கைகூடும். திடீர் அதிர்ஷ்டத்தால் சிலருக்கு நல்ல பலன் உண்டு. பெண்கள் இன்று முழுவதும் மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

**கும்பம்:** முயற்சிகள் ஓரளவு வெற்றி தரும். நன்மைகள் கைகூடும். சிலருக்கு திடீர் பணவரவு உண்டாகும். நீண்ட நாள் கவலை தீரும்.


**மீனம்:** விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். நட்பு வட்டம் விரியும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். பிள்ளைகளால் சொந்த பந்தங்கள் மத்தியில் அந்தஸ்து உயரும்.

# முதலாவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

இணுவில்

## அமரர் மு. விஜயரகுநாதன்

(முன்னாள் கணக்காளர் யாழ். மாவட்டச் செயலகம்)
(யாழ். போதனா வைத்தியசாலை)



நவப்பேறு 30 • 05 • 1951

சிவப்பேறு 03 • 01 • 2020

திதி: 22.12.2020

எங்கள் அன்புக்குரிய தெய்வமே!
எப்பிறப்பில் காண்போம்?

திருமதி குககுமாரி விஜயரகுநாதன்
(மனைவி - இளைப்பாறிய அதிபர்)
பிள்ளைகள், மருமக்கள்,
மைத்துனர், மைத்துனிகள்

146, 4A, கோயில் வீதி,
நல்லூர்

**விற்பனைக்கு**

**டிப்பர் வாகனம் LN** என்ற தொடரிலக்கத்தை உடைய **கார்கோ டிப்பர்** விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு- 077 367 8019

**மாபிள் வேலை** உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து ஒரு சதுர அடி - 50 ரூபா, இழுத்து பதிக்க - 65 ரூபாய்

தொடர்புகளுக்கு- 077 334 1281

## ரஜமஹா விகாரை புனித பூமி

பொலநறுவை,டிசெ.22

பொலனறுவை சொலஸ்மஸ்தான ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தும் புண்ணிய நிகழ்வு நேற்று நடைபெற்றது. புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ச தலைமையில் கல்கே விகாரை உத்தராராமவில் நடைபெற்றது. (ஐ-இ)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 24 • 10 • 1957

ஆண்டவன் அடியில் 14 • 01 • 2019

## அமரர் கந்தையா தர்மகுலசிங்கம் (மில் ரவி)

(உரிமையாளர் K.T.M Oil Mill கல்வியங்காடு)


திதி: 22.12.2020

குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே!
இப் பாரினில் எம்மைப் பரிதவிக்க விட்டுச்
சென்றாலும் என்றும் விடிவெள்ளியாய்
வழி நடத்தும் எங்கள் அப்பாவே!
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

K.T.M oil Mill
கல்வியங்காடு

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



உதிப்பு 03 • 12 • 1977

உதிர்வு 18 • 12 • 2020

## செல்வராஜா சந்திரசேகரன் (சேகர்)

(பழவகை வியாபாரி, சாவகச்சேரி பொதுச் சந்தை)

கச்சாய் வீதி ,சாவகச்சேரியை பிறப்பிடமாகவும். வதிவிடமாகவும் கொண்ட செல்வராஜா சந்திரசேகரன். 18.12.2020 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்வராஜா - வசந்தா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான. தர்மலிங்கம் - மலர் தம்பதியினரின் அன்பு மருமகனும், அனுசியாவின் அன்புக் கணவரும். செந்தூரன், சாம்சன், குபேரன், டிலக்ஸன், லக்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தமலர், சந்திரகலா, சித்திரகலா, நித்தியகலா, செல்வமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஸ்ரீகாவின் அன்பு மாமனும், நயனிகாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல். 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல். தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர். நண்பர்கள். அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு • 10 • 07 • 1983

உதிர்வு • 21 • 12 • 2020

## யதுசன் சஜிதா (ஜஷா)

ஐந்து வேம்படி, தாவடி தெற்கு, கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யதுசன் சஜிதா நேற்று (21.12.2020) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் யதுசனின் அன்பு மனைவியும், வேலையா பேபி ஆகியோரின் அன்பு மகளும், சுஜாதா, விஜிதா (பிரான்ஸ்), அகிலன் (New Kamal Ceremics) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2020) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 676 3690, 077 9638 804,
076 1767 634

# மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 02 . 1942



மறைவு
21 . 12 . 2020

## திருமதி தவமணிதேவி முருகையன்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணிதேவி முருகையன் நேற்று (21.12.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கவிஞர் முருகையனின் துணைவியாரும், நாவலன், நாமகள் ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வகுமாரன் அவர்களின் மாமியும், கிருத்திகன், அபிராமி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.12.2020) செவ்வாய்கிழமை காலை 7 மணிக்கு பொரளை லங்கா மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பூதவுடல் மாதம்பிட்டிய இந்து மயானத்தில் 12 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
011 238 4878

## வன்னி, கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (வ/து)

### பதவி வெற்றிடம்

**01. கணினி பக்க உருவாக்குனர் 322/13**

மேற்படி பணி நிலைக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரியிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

சம்பளத்திட்டம் 322/13
16365 - 19265 - (சுற்று நிருப இல. 04/2018 இற்கு அமைய )
140 X 10 - 150 X 10
காலத்திற்கு காலம் சுற்று நிருபங்களிற்கு அமைவாக வழங்கப்படும் அனைத்துப் படிகளும் வழங்கப்படும்.

**தகைமைகள்**

01) (அ) சிங்களம், தமிழ் மொழி மற்றும் கணிதம் எண் கணிதத்தில் திறமைச் சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அரச அல்லது ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்குக் குறையாத முழு நேர M.S Office அல்லது அதனையொத்த கணினிப் பாடநெறி ஒன்றைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

அல்லது

ஆ) அரச அல்லது ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனமொன்றில் 03 மாதங்களுக்கு குறையாத முழு நேர M.S Office அல்லது அதனையொத்த கணினிப் பாடநெறி ஒன்றைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் அத்துடன் குறித்த இப் பதவியில் அல்லது அதனையொத்த பதவியொன்றில் ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஓராண்டுக்குக் குறையாத காலம் கடமை புரிந்திருத்தல்.

**02. அலுவலக சேவகர் 317/16**

மேற்படி பணி நிலைக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரியிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படு கின்றது.

**சம்பளத்திட்டம் 317/16**
15135 - 17685 (சுற்று நிருப இல. 04/2018இற்கு அமைய )
120 X 10 - 135 X 10
காலத்திற்கு காலம் சுற்று நிருபங்களிற்கு அமைவாக வழங்கப்படும் அனைத்துப் படிகளும் வழங்கப்படும்.

**தகைமைகள்**

01) அ) கூட்டுறவு ஊழியர் 17 வது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவத்துடன் 05 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

அல்லது

ஆ. 08 ஆம் தர கல்விச் சான்றிதழ்

- வயதெல்லை - 18 - 45ற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது கணிப்பிடப்படும்.
- சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. சங்கப் பணியாளர்கள் தங்களது சங்கத்தினூடாக விண்ணப்பிக்கவேண்டும்.
- சேவைத் தகைமை, தொழில் அனுபவம் கவனத்தில் எடுக்கப்படும்.
- கல்வித்தகைமை, சேவைத் தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
- **விண்ணப்ப முடிவுத் திகதி : 04.01.2021**

**குறிப்பு:**

விண்ணப்பங்கள் யாவும் **தலைவர் வன்னி, கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம், A9 வீதி,** கிளிநொச்சி. எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**திரு.பி.விஜயச்சந்திரன்.**
**தலைவர்,**
**வன்னி,** கிளிநொச்சி **ப.தெ.வ.அ.கூ.நிறு. பேரிணையம்.**
A9 **வீதி,** கிளிநொச்சி.

# துயர் பகிர்கின்றோம்



அண்மையில் மறைந்த எமது ஆலயத்தின் முன்னாள் பரிபாலன சபைத் தலைவர்

**அமரர் வீரவாகு ஆறுமுகம்**

அவர்களது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா கற்பக விநாயகனை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலன சபையினர்,**
**ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்**
**உரும்பிராய்.**

# கண்ணீர் அஞ்சலி



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்
**திருமதி ஸ்ரீரங்கேஸ்வரன் ஜீவனா**
அவர்களின் தாயார்

**அமரர்**
**விஸ்வலிங்கம் செல்வராணி**

அவர்கள் மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்.**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,**
**யாழ்ப்பாணம்.**

# கண்ணீர் அஞ்சலி



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திரு.பால கிருஸ்ணமூர்த்தி வினோதரன்**
அவர்களின் மாமனார்

**அமரர் சோமசுந்தரம் புவனசுந்தரம்**

அவர்கள் மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்.**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,**
**யாழ்ப்பாணம்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



**தோற்றம்**
**21.03.1959**

**மறைவு**
**22.11.2020**

## நடராஜா அருள்நாதன்

**(உரிமையாளர் - அபிகிஷாந் கட்டிடப் பொருள் விற்பனை நிலையம்)**

நிஜமாக நீங்கள் மறைந்து
முப்பத்தொருநாள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக்கடந்தாலும் - உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்.

**16, ராணி வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

# 43ஆம் அரசியல் படையணி: உருவாக்குகின்றார் சம்பிக்க!

கொழும்பு, டிசெ. 22

ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து வெளியேறியுள்ள சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட குழுவினர் புதியதொரு அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் என தெரியவருகின்றது.

குறித்த இயக்கத்துக்கு '43ஆம் பிரிவு' என பெயரிடப்படவுள்ளது எனவும், 'இது இலக்கமல்ல தலைமுறை' என்ற மகுடத்தின் கீழ் அந்த இயக்கத்தின் அரசியல் பயணம் ஆரம்பமாகும் எனவும் அறியமுடிகின்றது.

கடந்த பொதுத்தேர்தலின் பிறகு செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த அரசியல்வாதிகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளை இந்த இயக்கத்தில் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்க ப்பட்டுள்ளது.

1943ஆம் ஆண்டில்தான் இலங்கையில் இலவசகல்விக்கான சட்டமூலம் இயற்றப்பட்டது. தரம் ஒன்று முதல் பல்கலைக்கழக கல்விவரை இலவசக்கல்வி வழங்கப்பட்டது. இதுவே இலங்கையில் சமூக வளர்ச்சிக்கு வித்திட்டது. எனவேதான் '43' என்ற பெயர் சூட்டப்படவுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியை பலப்படுத்தும் ஒரு பங்காளியாக குறித்த இயக்கம் செயற்படக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. (ம-44)

# சுதந்திரக் கட்சியினருக்கு சஜித் தரப்பு அழைப்பு!

கொழும்பு, டிசெ. 22

சுதந்திரக்கட்சிக்கு தேவையேற்படின் தமது அணியுடன் இணைந்து பயணிக்கலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, 'பொதுஜன பெரமுனவின் செயற்பாடுகள் தொடர்பில் சுதந்திரக்கட்சி அதிருப்தியில் இருக்கின்றது. எனவே, அக்கட்சி உறுப்பினர்களையும் அரவணைத்துக்கொண்டு பயணிக்கும் எண்ணம் உள்ளதா' என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே எரான் விக்கிரமரத்ன எம்.பி. இவ்வாறு அழைப்பு விடுத்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'ஐக்கிய மக்கள் சக்தி என்பது எமது கட்சி. ஐக்கிய மக்கள் முன்னணி என்பது எமது கூட்டணி. எனவே, எமது கட்சியின் கொள்கையுடன் ஒத்துப்போகக்கூடிய எந்த கட்சியும், அமைப்புகளும், நபர்களும் எம்முடன் இணைந்து பயணிக்கலாம். கதவுகள் திறந்தே உள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி மீதான அதிருப்தியால் அக்கட்சியில் இருந்து வெளியேறியவர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சி கூட வரலாம். ஆனால் எமது கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.' என்றார். (ம-44)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
24.02.1987

மறைவு
22.11.2020

### அமரர் கணபதிப்பிள்ளை அழகேந்திரன்

(அழகன், A/L 2006 கணிதப்பிரிவு யா/இந்துக் கல்லூரி, பழைய மாணவன்)

ஞாயிறு என்றவுடன் எம் மனதில் மகிழ்ச்சியடா
அப்படி ஒரு ஞாயிறு தான் உன்னை எங்களிடம் இருந்து பிரிய வைக்கும்
என்று கனவில் கூட நினைக்கவில்லையடா
"டேய் அண்ணன்" "எடி அக்கா" என்பாய்
அம்மா அப்பா என்ற சொல்லுக்கு - மறுவார்த்தை
கூறாத உன் அழகு வசனம் - இன்றும்
கொல்கிறது பெற்றவர்களை

அழகு! நீ அழகானவனாய் இருப்பாய் என்பதாலோ
உனக்கு அழகன் என்ற நாமம் சூட்டினார் அப்பா
அந்த அழகு முகம் தேடி உன் அப்பா எங்கெங்கெல்லாம்
புலம்பி அலைகின்றார்
நாம் ஒன்பதில் ஏனப்பா அழகன்! உன்மேல்
மட்டும் இவ்வளவு பாசம்? - ஏன்
எம்மேல் இல்லையென்று எமக்குள் பொறாமை - ஆனால்
நீ எம்மேல் பொறாமை கொள்ளவில்லையடா

கணக்கு படித்ததால் எல்லாவற்றுக்கும்
கணக்கு போட்டிடுவாய் - நீ
போட்ட கணக்கு என்றும் தப்பிக்கவில்லை
உனக்கு நீ கணக்கு போட்டதால் தானோ
உன் உயிர் செல்வங்களுக்கு 'நான் miss பண்ணுகிறேன் என sms போட்டாயடா

ஏன் அழகா ஒருவார்த்தை சொல்லவில்லை
"நான் போகப் போகிறேன் என்று -உன் உயிரையே
தன்னோடு வைத்திருந்த தாய்க்கு - பெற்றவள்
உனை நினைத்து உக்காமல் உக்குவதை
எங்கிருந்து பார்க்கிறாயடா


உன் மடியில் குழந்தையாய் உன் பிள்ளைகள்
இருக்கும் நேரத்தில் - பெற்றவள் மடியில்
ஏண்டா மீண்டும் குழந்தையாய் வந்து - பாசத்தை கூட்டினாய்
விரைவிலே எம்மையெல்லாம் விட்டு பிரியவாடா?

உன் ஆத்மா சாந்திபெற நீலிப்பந்தனை துர்க்கை அம்பாளையும் ஆண்டிகேணி ஐயனாரையும் அனுதினமும் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

நீலிப்பந்தனை, காரைநகர். **குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
06 . 11 . 1941

மறைவு
23 . 11 . 2020

### அமரர்
### பொன்னையா சண்முகநாதன்

அமைதியான புன்சிரிப்பும்
கள்ளமில்லா வெள்ளை மனமும்
புன்னகை பூத்த பொன்முகமும் மறைந்ததேனோ
அன்பால் எமை அணைத்து
அருமை பெருமையாய் எமை வளர்த்து
இன்முகம் தினம் காட்டி
இனிமையாய் எமை வளர்த்தீர்
பார் போற்ற வளர்த்த நீங்கள்
பரன் அடி சேர்ந்திட்டீர்
இன்றோடு முப்பது நாள்
உருண்டோடிச் சென்றாலும்
உள்ளத்தில் உம் நினைவு
ஒருபோதும் மாறாது.

4ஆம் ஒழுங்கை,
மானிப்பாய் வீதி, மருதனார்மடம்.

மனைவி,
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



"மனோன்மணி வாசகம்"
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
0077 976 0407, 0047 99853636
0033 609 152 059, 00417 8891 1842

கடந்த 22.11.2020 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

### அமரர் திருமதி
### அருளம்பலம் மகேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 20.12.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரை நடைபெற்றன.

வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.12.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### கதிரித்தம்பி வீரசிங்கம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட்)



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி வீரசிங்கம் அவர்கள் 21.12.2020 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி முத்துப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் மீனாட்சியின் பிரியமிகு கணவரும் சிவகுமார் (உதவி திட்டமிடல் பணிப்பாளர் வலி வடக்கு பிரதேச செயலகம், தெல்லிப்பழை) சித்திரா (முன்னாள் மொழிபெயர்ப்பாளர், வலி வடக்கு பிரதேச செயலகம், தெல்லிப்பளை) உதயகுமார் (ஆசிரியர் புனித கென்றியரசர் கல்லூரி இளவாலை), சியாமளா, கீதா (ஆசிரியர், பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மகாராணி, கண்ணதாசன் (கணக்காளர்- டுபாய்) மாதினி (ஆசிரியை, கன்னியர்மட வித்தியாலயம் இளவாலை), சிவனேஸ்வரன், கணேஷ் ஆகியோரின் மாமனாரும் தனுசிகன், தனுசன், சரண்யா, கபிலன், அனந்தா, ஆராதனா, கம்சனா, சர்மிலன் (பொறியியல் பீடம், மொரட்டுவ பல்கலைக்கழகம்), தர்மிகா, நிதுசா, கஜாகரன், கஜதீபன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான முருகையா, சின்னராசா தில்லையம்பலம் மற்றும் சிவக்கொழுந்து, வேலும்மயிலும், துரைராசா, தம்பையா, சுந்தரலிங்கம், பத்மராணி ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அளவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னிப்புலம், அளவெட்டி வடக்கு.
அளவெட்டி.

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நாகமுத்து கேதாரம்



கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இல.45, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து கேதாரம் 21.12.2020 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து இலட்சுமியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மனுவெல், றோசம்மா ஆகியோரின் மருமகனும், மேரிறோசின் அன்புக் கணவரும், தேவகௌரி (சுவிஸ்), விஜிதா (சுவிஸ்), தவதர்சன் (ஜேர்மன்) திருக்குமரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதாசன் (சுவிஸ்), அன்ரன் றமேஸ் (சுவிஸ்) சில்வியா (ஜேர்மன்), வினோதினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், யோகம்மா, அழகம்மா, சதாசிவம் (ஓய்வுநிலை சுகாதார பரிசோதகர்), செல்வராசா, இராசையா, சந்திராதேவி, சற்குணராசா, விமலாதேவி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அலெக்சான்ரர், தேவமலர், றெஜினா நீற்றா மற்றும் சிங்கராசாவின் மைத்துனனும், ஆத்தனன், ஆரத்தியா, றியானா, றிஸ்வின், ஜவிலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.12.2020 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : மனைவி, பிள்ளைகள்.
0049-15213883994
0041-417110374

# இடமாற்றல் குறைபாடுகளை தீர்க்காவிடில் போராட்டம்!

## பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.22

வடக்கு மாகாணத்தின் தேவை கருதிய சேவை இடமாற்றத்தின்போது உள்ள குறைபாடுகளால் ஆசிரியர்கள் உள நெருக்கீட்டுக்கு உள்ளாகின்றனர். பலரின் குடும்பங்களின் பிரிவினைக்கும் இது காரணமாக அமைந்துள்ளது. இடமாற்றத்தில் உள்ள குறைபாடுகளை நீக்காவிட்டால், பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

இவ்வாறு இடமாற்றத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது

இடமாற்றம் என்பது எல்லோருக்குமானது. அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அது மாணவர்களுக்கு நன்மை பயப்பதாகவும், ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தின் இடமாற்றக் கொள்கையில் நிரந்தரமான சுற்றறிக்கைக் கொள்கை இதுவரை இல்லை. காலத்துக்குக் காலம் சுற்றறிக்கை மாற்றப்படுவதால் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகின்றனர். சில ஆசிரிய சங்கங்கள் தங்கள் சொந்த நலன் சார்ந்து செயற்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் ஆசிரியர்களுக்காகக் குரல் கொடுக்கத் தவறுகின்றனர்.

இடமாற்றத்தை விரும்பி ஏற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்கு கீழ்க் கண்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இடமாற்றத்துக்கான கால அளவு மூன்று வருடம் என்பதை வட மாகாண கல்வித் திணைக்களம் குறிப்பட மறுக்கின்றமை.

மூன்று வருடம் எனக் குறிப்பிட்டு இடமாற்றப்பட்ட ஆசிரியர்களை இதுவரை விடுவிக்காமை.

கஸ்டப் பிரதேசத்தில் பணியாற்றிய ஆசிரியர்களை மீளவும் இடமாற்றத்துக்குக் கோருதல்.

இடமாற்றத்தின்போது ஒழுங்கான திட்டமிடல் இல்லை. அதனால் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கடிதத்துக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மதிப்பளிப்பதில்லை. அதனால் ஆசிரியர்களே பாதிப்படைகின்றனர்.

ஏழு ஆண்டுகள் கடந்தும் ஆசிரியர்கள் விடுவிக்கப்படாத நிலைமை.

இந்தக் குறைபாடுகளால் ஆசிரியர்களே பாதிப்படைகின்றனர். இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில் எம்மை நாம் பாதுகாப்பதற்காக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இவ்வாறான நிலைமை மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வலிந்து உருவாக்கப்படுகின்றது. இந்தக் குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

(எ-இ)

### யாழில்...

உடுவில் மற்றும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த மூவரே தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தில் நேற்று 383 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 120 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மூவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் எவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை.

தொற்றுக்குள்ளான மூவரும் மருதனார்மடம் சந்தை கொத்தணியுடன் தொடர்புடையவர்கள்.

கோப்பாயைச் சேர்ந்தவர் மருதனார்மடம் சந்தைக்குச் சென்று வந்தவர். இவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவரும் மருதனார்மடம் சந்தைக்குச் சென்று வந்த நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். இணுவிலில் தொற்றுடன் இனங்காணப்பட்டவர் ஏற்கனவே தொற்று உறுதிப்படுத்தப்பட்ட ஒருவரின் உறவினர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ-26)

### விதிமுறை...

இந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மாவட்டத்திலிருந்து வெளியே சென்று வந்துள்ளனர். அது தொடர்பில் சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு தகவல்வழங்காது வர்த்தகநிலையங்களைத் திறந்து வர்த்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அதையடுத்து அந்த வர்த்தக நிலையங்கள் சீல் வைத்து மூடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ26)

### ஆயுதம்...

பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவை புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்றும், அண்மையில் பெய்த மழையால் வெளிவந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ரி56 ரகத் துப்பாக்கிகள் ஐந்தும், ரவைக் கூடு ஒன்றும், 30 ரவைகளுமே மீட்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதி முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சூட்டுப் பயிற்சி நடைபெறும் இடமாக இருந்தது என்று கூறப்படுகின்றது.

மீட்கப்பட்ட பொருள்கள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற அறுவுறுத்தல் பெற்று மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-6)

### வீரசேகர...

அமைச்சர் சரத் வீரசேகர இருக்கின்றார். இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

மாகாண சபை முறைமை தேவையற்றது என சரத் வீரசேகர போன்றோர் குறிப்பிடும்போது, அரசில் அங்கம் வகிக்கும் வேறு சிலர், எதிர்வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதமளவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளது எனத் தெரிவித்து வருகின்றனர்.

'இலங்கை சிங்கள நாடு, தமிழ் மக்களுக்கென்று எந்தவிதமான அதிகாரப் பகிர்வும் வழங்கப்படக் கூடாது' என்ற சரத் வீரசேகரவின் கருத்து பிழையானது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்கள் எந்தக் காலத்திலும் பெரும்பான்மையாக இருந்ததில்லை.

அமைச்சர் சரத் வீரசேகர இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதால், இலங்கை மக்களிடையே சௌஜன்யமும், நல்லுறவும் ஏற்படாது. அவருடைய கருத்தை வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவும் முடியாது-என்றார். (எ-22)

### தமிழ்...

கென அல்லது தமிழ் மக்களுக்கென அல்லது முஸ்லிம் மக்களுக்கென பிரித்து வழங்க முடியாது.

இவ்வாறு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்

மாகாண சபை முறைமை தேவையற்றது எனக் கூறிவரும் அமைச்சர் சரத் வீரசேகர, அதனூடாகத் தமிழ் மக்களுக்கு எந்த விதமான அதிகாரப் பகிர்வையும் கொடுத்துவிடக் கூடாது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார். இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது' எனத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அமைச்சர் சரத் வீரசேகர இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரே நாடு ஒரே சட்டம் என்பதே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கை. இதை மீறி 9 மாகாணங்களில் 9 விதமான சட்டங்களை உருவாக்க முடியுமாயின் ஜனாதிபதியின் கொள்கை பொய்யாகிவிடும். எனவே, மாகாண சபை முறைமை தேவையில்லை.

மாகாண சபை முறைமையை இரத்துச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் அன்றிலிருந்து இன்றுவரை உறுதியாக இருக்கின்றேன். அதாவது இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் ஊடாக மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டபோது அதை நான் கடுமையாக எதிர்த்தேன். அன்றிலிருந்து இன்று வரை அதற்கு எதிராகவே கருத்து வெளியிட்டு வருகின்றேன். இதை உணராமல் விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ் அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்திலும், வெளியிலும் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வேண்டும் எனப் புலம்பித் திரிகின்றனர். இந்தப் புலம்பலை அவர்கள் உடன் நிறுத்த வேண்டும்-என்றார். (எ-22)

### அரசின்...

எதிர்வரும் ஜெனிவா அமர்வில் இலங்கை எதிர் நோக்கவுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கையில் 2009ஆம் ஆண்டு போரை நிறைவுக்குக் கொண்டு வந்த மஹிந்த ராஜபக்ச அரசு, பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பில் பல வாக்குறுதிகளை ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு வழங்கியிருந்தது. ஆனால், அந்த வாக்குறுதிகளை மஹிந்த அரசு நிறைவேற்றாத காரணத்தாலேயே இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அதன் உறுப்பு நாடுகள் தீர்மானங்களை அடுத்தடுத்து நிறைவேற்றின. எனினும், அந்தத் தீர்மானங்கள் கிடப்பில் போடப்பட்டன.

தற்போதைய கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசும் அந்தத் தீர்மானங்கள் தொடர்பில் முன்மாதிரியான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. போதாக்குறைக்கு கடந்த நல்லாட்சி அரசில் மீளவும் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து இந்த அரசு விலகி நாட்டுக்கான சர்வதேச நெருக்குவாரங்களை அதிகரிக்கச் செய்துள்ளது.

அதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களையும் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக அரசு எரித்து வருகின்றது. இது முஸ்லிம் மக்களின் மத நம்பிக்கையை உதாசீனம் செய்யும் அடிப்படை உரிமை மீறலாகும். இந்த விவகாரமும் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் எதிரொலிக்கும் எனத் தெரிய வந்துள்ளது.

தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் மீது கைவைத்து அவர்களைச் சீண்டுவதால் எந்தவிதமான நன்மைகளையும் ராஜபக்ச அரசு பெறப்போவதில்லை. மாறாக நாட்டுக்கு சர்வதேச அரங்கில் அவப் பெயரைத்தான் இந்த அரசு சம்பாதிக்கின்றது. இது இலங்கை மீதான சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை மென்மேலும் அதிகரிக்கச் செய்யும் என்றார். (எ-22)

### கோத்தா...

வித்ததாவது:

"நான் 2015ஆம் ஆண்டு தான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டபோது அரசமைப்பு சீர்திருத்தம் ஒன்றின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க நடவடிக்கை எடுத்தேன்.

ஜனநாயக அம்சங்களான சமாதானம், சமத்துவம், ஊடகச் சுதந்திரம், நீதி போன்ற விடயங்களுக்கு நான் பதவியில் இருந்தபோது முக்கியத்துவம் வழங்கினேன்.

நீதிமன்றங்கள், பொலிஸ், தேர்தல் போன்ற சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான நியமனங்களின்போது, அரசியல் செல்வாக்கு இருக்கவில்லை-என்றார். (எ-22)

### ஜனவரி....

ஆரம்பமாகும் என்பது தொடர்பில் பெரும் சந்தேகம் இருந்த நிலையில் கல்வி அமைச்சர் இவ்வாறு அறிவித்துள்ளார். மேல் மாகாணத்திலும் ஏனைய தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளும் விதிவிலக்கு என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பில் அடுத்த தீர்மானங்கள் விரைவில் வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-இ)

### நேற்றும்...

773 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

# 2 ஆவது ரி20 தொடரையும் கைப்பற்றியது நியூசிலாந்து





வெலிங்டன், டிசெ.22
நியூசிலாந்து பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2 ஆவது ரி20 கிரிக்கெட் தொடரை நியூசிலாந்து 9 இலக்குகள் வித்தியாசத்தில் கைப்பற்றியது. இந்த 2ஆவது ரி20 கிரிக்கெட் போட்டி ஹாமில்டனில் நடைபெற்றது.

நாணயச்சுழற்ச்சியில் வென்ற பாகிஸ்தான் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. இதில் அனுபவ வீரரான முகமது ஹபீஸ் ஆட்டமிழக்காமல் 10 நான்கு ஓட்டங்கள், 5 ஆறு ஓட்டங்களுடன் 99 ஓட்டங்கள் விளாசினார். இவர் மட்டுமே சிறப்பாக விளையாடியதால் பாகிஸ்தான் 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகள் இழப்புக்கு 163 ஓட்டங்கள் எடுத்தது. நியூசிலாந்து அணி தரப்பில் டிம் சவுத்தி 4 பந்துப் பரிமாற்றங்களில் 21 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 4 இலக்குகள் வீழ்த்தினார்.

பின்னர் 164 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து களமிறங்கியது. தொடக்க வீரர் மாரட்டின் கப்தில் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து டிம் செய்பெர்ட் உடன் அணித்தலைவர் கேன் வில்லியம்சன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி இலக்குகள் இழக்காமல் 19.2 பந்து பரிமாற்றங்களில் 164 ஓட்டங்கள் எடுத்து நியூசிலாந்து அணியை 9 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தது.

செய்பெர்ட் 63 பந்துகளில் 84 ஓட்டங்களும், கேன் வில்லியம்சன் 42 பந்துகளில் 57 ஓட்டங்களும் விளாசினர். 3 ஆவது மற்றும் கடைசி போட்டி இன்று நேப்பியரில் நடைபெறவுள்ளது. (ற-இ)

# இரண்டாவது டெஸ்ட்டில் ஜடேயா?



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஜடேயா களமிறங்குவார் என்று தெரிய வருகின்றது.

முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது. வரலாற்றில் என்றும் இல்லாத அளவுக்கு 36 ஓட்டங்களில் சுருண்டு படுதோல்வியடைந்தது இந்திய அணி. இதனால் அடுத்த ஆட்டத்தில் இந்திய அணியில் பல மாற்றங்கள் செய்யப்படலாம் என்று கருதப்படும் நிலையில் ஜடேயாவைக் களமிறக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று கருதப்படுகின்றது. (ம)

## தங்கம் வென்ற அமித்

புதுடில்லி, டிசெ.22
உலகக் கிண்ணக் குத்துச்சண்டைப் போட்டியில் இந்திய வீரர் அமித் பன்ஹால் தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றார். உலகக் கிண்ண குத்துச்சண்டைப் போட்டி ஜேர்மனியில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான 52 கிலோ பிரிவில் இறுதிப் போட்டிக்கு முன்னேறி இருந்த இந்திய வீரர் அமித் பன்ஹாலை எதிர்த்து களம் இறங்க இருந்த ஜேர்மனி வீரர் அர்ஜிஷ்டி டெர்டெர்யன் கடைசி நேரத்தில் விலகியதால் போட்டியின்றி அமித் பன்ஹால் தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றார். (ற-இ)



கொரோனாவுக்கு

# தடுப்பூசி ஏற்றிய தாதி நேரலையில் மயங்கினார்!


நியூயோர்க், டிசெ.22
அமெரிக்காவில் தடுப்பூசி பெற்றுக்கொண்ட தாதியொருவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துக் கொண்டிருக்கும்போது நேரலையில் மயங்கி வீழ்ந்ததை அடுத்து குறித்த தடுப்பூசிக்கு கடும் எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் முதலாவதாக கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவர் தலைமைத் தாதி டிபானி பாண்டிஸ். இவர் கடந்த சனிக்கிழமை கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவுடன், அது தொடர்பில் ஊடகங்களுக்கு நேர்காணல் வழங்கிக்கொண்டிருந்தார். அப்போது சில நிமிடங்களில் அவர் மயங்கிச் சரிந்து விட்டார். இந்த நேரலை உலகமெங்கும் செய்தி ஊடகங்களில் 'வைரல்' ஆகிவிட்டது.

இதையடுத்து தடுப்பூசிக்கு எதிர்ப்பு வெளியிட்டு வருவோர், கொரோனா தடுப்பூசி பாதுகாப்பானது இல்லை என்பதற்கு இந்தச் சான்றே போதும்; உடனடியாக அதைத் தடை செய்யுங்கள் என்று வலியுறுத்தியுள்ளனர். (ம-வஇ)

# தடுப்பூசிக்கு ஏற்ப தன்னை உருமாற்றியது கொரோனா

## மீண்டும் முடக்கிய பிரிட்டன்



லண்டன், டிசெ. 22
பிரிட்டனில்கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டுவரும் நிலையில், புதிய வகை கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியுள்ளது என்ற தகவல் வெளியாகி உள்ளது. இதனால் அங்கு மீண்டும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

உலகில் கொரோனாத் தொற்றுப் பாதிப்பு படிப்படியாக குறையத் தொடங்கியுள்ளது. பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் கொரோனா தடுப்பூசி மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நிலையில், இங்கிலாந்தில் கடந்த சில நாள்களாக கொரோனா பாதிப்பு திடீரென அதிகரித்துள்ளது. இதற்கு காரணம், உருமாற்றத்துடன் கூடிய புதியவகை கொரோனா வைரஸ் பரவுவதே என்பது கண்டறியப்பட்டுள்ளது. நிலைமை தற்போது கைமீறிப் போய்விட்டது என அந்த நாட்டின் சுகாதார அமைச்சர் தெரிவித்திருந்தார். இதற்கிடையே, லண்டன், தென்கிழக்கு, கிழக்கு இங்கிலாந்து பகுதிகளில் மீண்டும் ஊடரங்கை பிரதமர் போரிஸ் ஜோன்சன் நேற்று அறிவித்தார். அத்தியாவசியப் பணிகளுக்காக மட்டுமே மக்கள் வெளியே வரவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-வ-இ)

# மாஸ்க் அணிய தவறிய ஜனாதிபதிக்கு அபராதம்

## சிலி நாட்டில் அதிரடி

சான்தியாகோ, டிசெ. 22
முகக்கவசம் இன்றி பொதுவெளியில் நடமாடிய சிலி நாட்டு ஜனாதிபதி செபஸ்டியன் பெனெரா வுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

செபஸ்டியன் பெனெரா தனது சொந்த ஊரான கச்சாகுவா நகரில் உள்ள கடற்கரைக்கு சென்ற போது, அங்கிருந்த ஒரு பெண்ணின் விருப்பத்துக்காக அவருடன் செல்பி எடுத்துக்கொண்டார். அதன்போது பெனெரா முகக்கவசம் அணிந்திருக்கவில்லை. இந்த படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி சர்ச்சைக்குள்ளானது.

இதையடுத்து சிலி அரசு, ஜனாதிபதி செபாஸ்டியன் பெனெராவுக்கு 3 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் அபராதம் விதித்துள்ளது. இதனை ஏற்றுக்கொண்ட பெனெரா தனது செயலுக்காக மன்னிப்பும் கோரியுள்ளார். (ம-வ-இ)



ENGLISH CLASSES
Zoom மூலம்
Gr.1 to O/L
Grammer With Syllabus
077 331 4608